



admin@dhinakani.com

RNI-TNTAM/2023/88253

# நமது தினகனி

NAMADHU DHINA KANI

www.dhinakani.com

காலை நாளிதழ்






| Vol: 04 | Issue: 009 | 4 Pages | 09.08.2026 | Sunday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 |
|---|---|---|---|---|---|---|
| மலர்: 04 | இதழ்: 009 | 4 பக்கங்கள் | 09.08.2026 | ஞாயிற்றுக்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 |




**குணமென்னும் குன்றேறி நின்றார் வெகுளி**
**கணமேயும் காத்தல் அரிது**

**விளக்கம்:** நல்ல பண்புகளாகிய மலையின்மேல் ஏறிநின்ற பெரியோர், ஒரு கணப்பொழுதே சினம் கொள்வார் ஆயினும் அதிலிருந்து ஒருவரைக் காத்தல் அரிதாகும்.

# சென்னை ஐகோர்ட்டுக்கு புதிய நீதிபதிகள் நியமனம்: முதல்அமைச்சர் விஜய் வாழ்த்து

சென்னை, ஆக. 9

சென்னை ஐகோர்ட்டில் மொத்தம் 75 நீதிபதி பணியிடங்கள் உள்ளன. இதில் 51 நீதிபதிகள் உள்ளனர். 24 காலிப்பணியிடங்கள் உள்ளன. இந்த இடங்களுக்கு மாவட்ட நீதிபதிகள், வக்கீல்கள் என்று 19 பேருடைய பெயரை சென்னை ஐகோர்ட்டு மூத்த நீதிபதிகள் கொண்ட கொலீஜியம் பரிந்துரை செய்தது.

இந்த பரிந்துரையை சுப்ரீம் கோர்ட்டு மூத்த நீதிபதிகள் கொண்ட கொலீஜியம் ஏற்றுக் கொண்டது. அந்த பரிந்துரையை மத்திய அரசுக்கு அனுப்பி வைத்தது. இந்த பரிந்துரை பரிசீலித்த மத்திய அரசு, 15 பேரை ஐகோர்ட்டு நீதிபதிகளாக நியமிக்க பரிந்துரைத்தது. இந்த பரிந்துரையை ஏற்றுக் கொண்டு ஜனாதிபதி நேற்று உத்தரவு பிறப்பித்தார்.

இந்த நிலையில், சென்னை ஐகோர்ட்டுக்கு புதிதாக நியமிக்கப்பட்ட நீதிபதிகளுக்கு தமிழ்நாடு முதல்அமைச்சர் விஜய் தனது வாழ்த்துகளை தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள பதிவில் தெரிவித்திருப்பதாவது;





இந்திய ஜனாதிபதியால் மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்திற்குப் புதிதாக நீதிபதிகளாக நியமிக்கப்பட்டுள்ள கோவிந்தராஜன் கிருஷ்ணசாமி, ரஜ்னிஷ் பதியில், ரமேஷ் நடராஜன், ஜி.கே.முத்துக்குமார், ராமகிருஷ்ணன் ராஜேஷ் விவேகானந்தன் மற்றும் மாண்பமை சென்னை ஐகோர்ட்டின் கூடுதல் நீதிபதிகளாக நியமிக்கப்பட்டுள்ள ரவீக்குமார் சங்கரநாராயணன், திலீப் குமார் நாகராஜன், எல்லப்பன் மனோகரன், பி. முருகன்,
எம்.டி.சுமதி, எஸ்.அல்லி, சி. திருமகள், சண்முகம் கார்த்திகேயன், முருகேசன் பாலுச்சாமி, என்.குணசேகரன் ஆகியோருக்கு எனது மனமார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.
நீதியின் மாண்பையும், அ ர சி ய ல மை ப் பின் விழுமியங்களையும்நிலைநாட்டி, மக்கள்அனைவருக்கும்சமநீதியும், சமூகநீதியும் கிடைக்கச் செய்யும் வகையில் தங்களது பணி சிறக்கட்டும்!
இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சப்இன்ஸ்பெக்டரின் மகன் ஓட்டிய கார் மோதி மூதாட்டி பலி; அதிர்ச்சி சம்பவம்




டெல்லி, ஆக. 9

தலைநகர் டெல்லியின் நரிலா பகுதியிலுள்ள சாலையோரம் இன்று காலைஊர்மிளாஎன்ற70வயதுமூதாட்டிநடந்துசென்றுகொண்டிருந்தார்.

அப்போது, அவ்வழியாக வேகமாக வந்த சொகுசு கார் சாலையோரம் நிறுத்தப்பட்டிருந்த வேன் மீது மோதியது. பின்னர், சாலையில் நடந்து சென்றுகொண்டிருந்த மூதாட்டி ஊர்மிளா மீதும் மோதியது. இந்த கோர விபத்தில் மூதாட்டி ஊர்மிளா சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

தகவலறிந்து விரைந்து சென்ற போலீசார், விபத்தை ஏற்படுத்திய சொகுசு கார் டிரைவரை கைது செய்தனர். கைது செய்யப்பட்ட நபரிடம் நடத்தப்பட்ட விசாரணையில் அவரது பெயர் சுபம் என்பதும் இவரது தந்தை அரியானா மாநில காவல் துறையில் சப் இன்ஸ்பெக்டராக செயல்பட்டுவந்ததும்தெரியவந்தது.இதையடுத்து,கைதுசெய்யப்பட்ட சுபம் சிறையில் அடைக்கப்பட்டார்.

# என் அனுபவத்தில்... குறைந்த மதிப்பில் கடன் வழங்கினால், அது முழுமையாக திரும்பும்: அமித்ஷா பேச்சு



மும்பை, ஆக. 9

கடன் தொகை குறைவாக வழங்கப்பட்டால், கடன் வசூல் சிறப்பாக இருக்கும் என மத்திய மந்திரி அமித்ஷா கூறினார்.

மராட்டியத்தின் மும்பை நகரில் நடந்த நிகழ்ச்சி ஒன்றில் மத்திய உள்துறை மற்றும் கூட்டுறவு துறை மந்திரி அமித்ஷா கலந்து கொண்டு பேசும்போது, ஒரு நகர்புற கூட்டுறவு வங்கி, அந்த பகுதியிலுள்ள அனைத்து மக்களின் கனவுகளையும் பூர்த்தி செய்ய உதவும்.

ஒரு வங்கி தலைவராக நான் பணியாற்றி உள்ளேன். அந்த வகையில், என் அனுபவத்தில், குறைந்த மதிப்பில் கடன் வழங்கினால், அதற்கான வசூல் விகிதம் அதிக அளவில் இருக்கும்.

எனது வங்கியில், ஒருமுறை நான் உத்தரவாதங்களோ அல்லது பிணையங்களோகோராமல்ரூ.2.5லட்சம்வரைகடன்வழங்குவது எனமுடிவுசெய்தேன். ஆனால், குழப்பமான 'கடன்திருவிழாவாக' இது மாறும் என மூத்த தலைமை செயல் அதிகாரியான ராமன்பாய் பட்டேல் என்பவர் கூறினார்.

நான் இந்த கூட்டத்தில் பங்கேற்க வருவதற்கு முன்பு, நேற்று அந்த வங்கியில் விசாரித்தேன். அந்த திட்டம் இன்னும் அமலில் உள்ளது. அதனுடன், கடன் வரம்பு ரூ.5 லட்சம் என்ற அளவில் அதிகரிக்கப்பட்டுள்ளது. கடன் செலுத்த தவறியவர்களின் விகிதம் பற்றி கேட்டபோது, அது 99.78 சதவீதம் என்ற அளவில் இருந்தது. அதுவும் வட்டியுடன் திருப்பி செலுத்தப்பட்டு இருந்தது.

இதில், கடன்செலுத்ததவறியவர்கள்யாரென்றால், சிறிய பிளாட் ஒன்றை வாங்கிய வீட்டு தலைவர் உயிரிழப்பது அல்லது ஆட்டோ ரிக்சாவுக்காக கடன் வாங்கியவர் உயிரிழப்பது, போன்ற துரதிர்ஷ்டவச சூழல்களே காரணிகளாக உள்ளன.

இதனால், கடன் வசூல் விகிதம் முழுமையாக 100 சதவீதம் என்ற அளவில் இல்லை. இதனை வைத்து பார்க்கும்பாது, கடன் தொகை குறைவாக வழங்கப்பட்டால், கடன் வசூல் சிறப்பாக இருக்கும். அதனால், இந்திய பொருளாதாரத்தில் சுய வேலைவாய்ப்பை உருவாக்குவதில் கூட்டுறவு சங்கங்கள் ஒரு முக்கிய பங்கு வகிக்கின்றன என்று அவர் பேசியுள்ளார்.

# மதுரை மீனாட்சி சுந்தரேசுவரர் கோவிலுக்கு சேவை செய்வதற்கான அறக்கட்டளை சொத்து பத்திரப்பதிவு விவகாரம்: பத்திரப்பதிவுக்கு உதவிய திண்டுக்கல் சிறுமலை பகுதியை சேர்ந்த கலிகுமார் என்பவர் கைது



மதுரை, ஆக. 9

மதுரைமீனாட்சிசுந்தரேசுவரர்கோவிலுக்கு சேவை செய்வதற்கான 60 கோடி மதிப்பிலான அறக்கட்டளை சொத்து பத்திரப்பதிவு விவகாரம் பத்திரப்பதிவுக்கு உதவிய திண்டுக்கல் சிறுமலை பகுதியை சேர்ந்த கலிகுமார் என்பவர் கைது செய்யப்பட்டார்.

மதுரை மாநகர் கோரிப்பாளையம் ஹக்கிம் அஜ்மல்கான் சாலையில் அசோதா விலாஸ் பங்களா மற்றும் அதனுடன் இணைந்த தோட்டம், மீனாட்சிசுந்தரேசுவரர்கோவில் மற்றும் அழகர்கோவிலுக்கு சேவை செய்வதற்காக கடந்த 1930 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட அறக்கட்டளைக்கு சொந்தமான சொத்துகள் கடந்த 2021 ஆம் தனி நபர்களுக்கு பத்திரப்பதிவு செய்ய்யப்பட்ட வழக்கில் கறம்பக்குடியை சேர்ந்த ராஜ்குமார், உசிலம்பட்டியை சேர்ந்த இளையராஜா, துணை ஆட்சியர் அன்பழகன் ஆகிய 3 பேரை மத்திய குற்ற பிரிவு காவல் துறையினர் கைது செய்த நிலையில் 4 ஆவது நபராக பத்திரப்பதிவுக்கு உதவியதாக திண்டுக்கல் மாவட்டம் சிறுமலை தென்மலை கிராமத்தை சேர்ந்த கலிகுமார் என்பவரை கைது செய்து விசாரணை நடத்திய பின்னர் சிறையில் அடைத்தனர்

# திருத்தணி முருகன் கோவிலில் நடிகை ரோஜா காவடி எடுத்து வந்து நேர்த்திக்கடன்



மதுரை, ஆக. 9

மதுரைமீனாட்சிசுந்தரேசுவரர்கோவிலுக்கு சேவை செய்வதற்கான 60 கோடி மதிப்பிலான அறக்கட்டளை சொத்து பத்திரப்பதிவு விவகாரம் பத்திரப்பதிவுக்கு உதவிய திண்டுக்கல் சிறுமலை பகுதியை சேர்ந்த கலிகுமார் என்பவர் கைது செய்யப்பட்டார்.

மதுரை மாநகர் கோரிப்பாளையம் ஹக்கிம் அஜ்மல்கான் சாலையில் அசோதா விலாஸ் பங்களா மற்றும் அதனுடன் இணைந்த தோட்டம், மீனாட்சிசுந்தரேசுவரர்கோவில் மற்றும் அழகர்கோவிலுக்கு சேவை செய்வதற்காக கடந்த 1930 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட அறக்கட்டளைக்கு சொந்தமான சொத்துகள் கடந்த 2021 ஆம் தனி நபர்களுக்கு பத்திரப்பதிவு செய்ய்யப்பட்ட வழக்கில் கறம்பக்குடியை சேர்ந்த ராஜ்குமார், உசிலம்பட்டியை சேர்ந்த இளையராஜா, துணை ஆட்சியர் அன்பழகன் ஆகிய 3 பேரை மத்திய குற்ற பிரிவு காவல் துறையினர் கைது செய்த நிலையில்4ஆவதுநபராகபத்திரப்பதிவுக்கு உதவியதாக திண்டுக்கல் மாவட்டம் சிறுமலை தென்மலை கிராமத்தை சேர்ந்த கலிகுமார் என்பவரை கைது செய்து விசாரணை நடத்திய பின்னர் சிறையில் அடைத்தனர்

# சென்னை பன்னாட்டு விமான நிலையத்தில் உயிர்காக்கும் ஏ.இ.டி கருவிகளை நிறுவி அவசரகால இதய சிகிச்சையை வலுப்படுத்தும் காவேரி மருத்துவமனை!




சென்னை, ஆக. 9

திடீர் மாரடைப்பு போன்ற உயிருக்கு ஆபத்தான இதய பாதிப்பு ஏற்படும் நேரத்தில் துரிதமாகச் செயல்பட்டு அவசரநிலை சிகிச்சையளிக்கும் திறனை மேம்படுத்தும் வகையில், காவேரி மருத்துவமனை மற்றும் சென்னை பன்னாட்டு விமான நிலையம் இணைந்து 'ஹார்ட்சேஃப்' திட்டத்தைத் தொடங்கியுள்ளன.

சென்னை விமான நிலைய இயக்குநர் ராஜா கிஷோர், காவேரி மருத்துவமனை குழும நிறுவனர் மற்றும் நிர்வாக இயக்குநர் டாக்டர் மணிவண்ணன் செல்வராஜ் ஆகியோர் முன்னிலையில் இத்திட்டம்தொடங்கிவைக்கப்பட்டது.இதில்மூத்தஅதிகாரிகளும் பங்கேற்றனர்.

இந்நிகழ்வில் பேசிய சென்னை பன்னாட்டு விமான நிலையத்தின் இயக்குநர் ராஜா கிஷோர் கூறுகையில்: "சென்னை பன்னாட்டு விமான நிலையம், ஒவ்வொரு பயணிக்கும், வருகையாளர்களுக்கும், பணியாளர்களுக்கும் பாதுகாப்பான சூழலை வழங்க உறுதி கொண்டுள்ளது.

தானியங்கி வெளிப்புற இதய உதறல்நீக்கி சாதனங்களை (AED) நிறுவியிருப்பது, எங்களின் அவசர மருத்துவத் தயார்நிலையை வலுப்படுத்தும் ஒரு முக்கியமான படியாகும். 24 மணி நேர விமான நிலைய மருத்துவ மையங்கள் மூலம் காவேரி மருத்துவமனை வழங்கி வரும் தொடர்ச்சியான ஒத்துழைப்பிற்கும், மருத்துவ அவசர காலங்களில் எங்கள் துரிதச் செயல்பாட்டுத் திறனை மேம்படுத்த அவர்கள் அளிக்கும் நிபுணத்துவத்திற்கும் எங்களது நெஞ்சார்ந்த பாராட்டுகள். என்றார்..




# தமிழ்வழியில் படித்த காவலர்களுக்கு நியாயம் கிடைக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் - அண்ணாமலை



சென்னை, ஆக 9

"வி த லீடர்ஸ்" அமைப்பின் நிறுவனர் அண்ணாமலை தனது எக்ஸ் தள பதிவில் கூறி இருப்பதாவது:

தமிழ் வழியில் கல்வி பயின்றவர்களுக்கு அரசுப் பணிகளில் 20% முன்னுரிமை வழங்கும் வகையில், கடந்த 2010 ஆம் ஆண்டு "தமிழ்நாடு தமிழ் வழியில் பயின்றவர்களுக்கு முன்னுரிமைச் சட்டம்" (PSTM Act) கொண்டு வரப்பட்டது. இதன் மூலம், தமிழ் வழியில் பயின்ற இளைஞர்களுக்கு, அரசுப் பணிகளில், 20% முன்னுரிமை வழங்கப்பட்டு வருகிறது.

அரசு ஊழியர்களும், இந்தச் சட்டத்தின்படி, TNPSC மூலம் GroupI போன்ற உயர்பதவிகளுக்கு, இந்த முன்னுரிமையைப் பயன்படுத்த முடிகிறது. ஆனால், TNUSRB மூலம் நடைபெறும் உதவி ஆய்வாளர் பணியிட நியமனங்களுக்கு, காவல்துறையில் ஏற்கனவே 5 ஆண்டுகள் கான்ஸ்டபிளாகப் பணிபுரிந்தவர்களுக்கு மட்டும் வழங்கப்படும் 20% துறை ஒதுக்கீட்டில், இந்த முன்னுரிமை வழங்கப்படுவதில்லை.

உதவி ஆய்வாளர் (SI) பதவிக்கான ஆட்சேர்ப்பு என்பது நேரடி நியமனமாகவே நடைபெறுகிறது. ஐந்து ஆண்டுகள் பணிபுரிந்த காவலர்களுக்கு துறை ஒதுக்கீட்டின்கீழ் 20% முன்னுரிமை வழங்கப்படுகிறது. ஆனால், அந்தத்துறை ஒதுக்கீட்டின்கீழ் போட்டியிடும் தமிழ் வழியில் கல்வி பயின்ற காவலர்களுக்கு, PSTM சட்டத்தின்படி வழங்கப்பட வேண்டிய தமிழ் வழி முன்னுரிமை வழங்கப்படாதது ஒரு முரண்பாடாக உள்ளது. கடந்த ஆண்டு, TNUSRBன் அறிவிப்பு எண் 01/2025ன் கீழ் நடைபெற்ற 1352 உதவி ஆய்வாளர் பணியிடங்களுக்கான நேரடி ஆட்சேர்ப்பில், 20% துறை ஒதுக்கீட்டின் கீழ் போட்டியிடும், 5 ஆண்டுகளுக்கு மேல் பணியாற்றும் காவலர்களுக்கு PSTM முன்னுரிமை வழங்கப்படவில்லை. காரணம், "ஏற்கனவே அரசு ஊழியர்கள்" என்பதே. ஆனால், PSTM சட்டத்தில், அரசு ஊழியர்களுக்கு இந்த முன்னுரிமை மறுக்கப்பட வேண்டும் என்று எங்கும் கூறப்படவில்லை.

இந்தச் சட்ட முரண்பாட்டை நீக்க, கடந்த ஆட்சிக்காலத்தில், 23.01.2026 அன்று, தமிழக அரசு "Tamil Nadu Bill No.4 of 2026" என்ற திருத்த மசோதாவை சட்டமன்றத்தில் தாக்கல் செய்தது. அந்த மசோதாவில், தமிழ் வழியில் படித்த அரசு ஊழியர்களுக்கும், உயர்ந்த ஊதியப் பதவிகளுக்கான நேரடி ஆட்சேர்ப்பில் PSTM முன்னுரிமை வழங்குவதே அரசின் நோக்கம் என்று தெளிவாக பதிவு செய்யப்பட்டுள்ளது. மேலும், இந்த முன்னுரிமையை ஒருமுறை பெற்றவர்கள், அதைவிட உயர்ந்த ஊதியப் பதவிகளுக்கு அதனை மீண்டும் பயன்படுத்த முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டிருந்தது. ஆனால், அந்த மசோதா இன்னும் சட்டமாகாத காரணத்தால், அறிவிப்பு எண் 01/2025ன் கீழ் உதவி ஆய்வாளர் தேர்வில் பங்கேற்ற தமிழ் வழியில் கல்வி பயின்ற காவலர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்கள் தாக்கல் செய்துள்ள W.P. No.11362/2026 (Vijay & Others) வழக்கு, சென்னை உயர்நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது.

இந்த வழக்கின் அடுத்த விசாரணை, 28.08.2026 அன்று நடைபெறவுள்ளது. எனவே, தவெக அரசு, தமிழ்நாடு சட்ட முன்வடிவு எண் 4/2026 மீது உடனடியாக முடிவெடுத்து, தமிழ் வழியில் கல்வி பயின்று, தமிழகக் காவல்துறையில் உண்மை யாகப் பணியாற்றும் காவலர்களுக்குக் கிடைக்க வேண்டிய நியாயமான உரிமை கிடைக்கும்படி, PSTM முன்னுரிமையை உறுதி செய்ய நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

# தவெக அமைச்சரவையில் காங்கிரசிற்கு இடம்: ஜி.கே.வாசன் வரவேற்பு




சென்னை, ஆக. 9

அமைச்சரவையில் காங்கிரஸ் கட்சிக்கு இடம்வழங்கப்பட்டதைவரவேற்பதாக தமிழ் மாநில காங்கிரஸ் தலைவர் ஜி.கே.வாசன் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் சென்னையில் செய்தியாளர் சந்திப்பில் கூறுகையில், காங்கிரஸ் இருந்தால் நேர்மையாக இருக்கும். கடந்த 60 ஆண்டுகால திராவிடக் கட்சிகளின் ஆட்சியில் காங்கிரஸ் கட்சிக்கு பிரதிநிதித்துவம் வழங்கப்படவில்லை. தற்போது அமைச்சரவையில் காங்கிரசுக்கு இடம் வழங்கப்பட்டிருப்பதை வரவேற்கிறேன்" என்றார்.

மேலும், காங்கிரஸ் உடன் இணைந்து தமாகா செயல்படும் என்றும், அதே நேரத்தில் தமிழ் மாநில காங்கிரஸ் தனது தனித்தன்மையுடன் இயங்கும் என்றும் ஜி.கே.வாசன் தெரிவித்தார்.

வரவிருக்கும் உள்ளாட்சித் தேர்தலில் அதிக இடங்களில் வெற்றி பெறும் வகையில் கூட்டணி அமைக்கப்படும் என்றும் அவர் கூறினார்.

# மக்கள் கூடும் இடங்களில் இலவச வைபை வசதி: சென்னை மாநகராட்சி ஆணையர் ஆலோசனை



சென்னை, ஆக. 9

பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் உள்ள கடற்கரைகள், பூங்காக்கள், விளையாட்டுத் திடல்கள் உள்ளிட்ட மக்கள் அதிகளவில் வந்து செல்லும் பகுதிகளில் மக்களுக்கு இலவச வைஃபை (WIFI) வசதி ஏற்படுத்துவது குறித்து இணைய சேவை வழங்குநர்களுடனான (Internet Service Providers) ஆலோசணைக் கூட்டம் மாநகராட்சி ஆணையாளர் டாக்டர்ஜி.எஸ்.சமீரன் தலைமையில் நடைபெற்றது.

இது தொடர்பாக சென்னை மாநகராட்சி வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவித்திருப்பதாவது;

தமிழ்நாடு முதல்அமைச்சரின் உத்தரவின்படி, மெரினா, பெசன்ட் நகர், திருவான்மியூர், திருவொற்றியூர் கடற்கரைகள், பூங்காக்கள், விளையாட்டுத் திடல்கள் உள்ளிட்ட மக்கள் அதிகளவில் வந்து செல்லும் பகுதிகளில் மக்களுக்கு இலவச வைபை (WIFI) வசதி ஏற்படுத்துவது குறித்து இணைய சேவை வழங்குநர்களுடனான (Internet Service Providers) ஆலோசணைக் கூட்டம் மாநகராட்சி ஆணையாளர் டாக்டர் ஜி.எஸ்.சமீரன் தலைமையில் இன்று (07.08.2026) ரிப்பன் கட்டட அலுவலகக் கூட்டரங்கில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மாநகராட்சி இணை ஆணையாளர் (பணிகள்) செ.சரவணன் மற்றும் ஏர்டெல் (Airtel), ஜியோ (Jio), ஹாத்வே (Hathway) மற்றும் ஏசிடி (ACT) ஆகிய இணைய சேவை வழங்குநர்கள், மாநகராட்சி தலைமைப் பொறியாளர் பாலமுரளி, கண்காணிப்புப் பொறியாளர் இளங்கோ உள்ளிட்ட அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

தமிழ்நாடு முதல்அமைச்சர், செயற்கை நுண்ணறிவு, தகவல் தொழில்நுட்பம் மற்றும் டிஜிட்டல் சேவைகள் ஆகியவற்றின் வளர்ச்சிக்கும் மக்களுக்கு எளிதாக சேவைகளை வழங்கும் வகையிலும் திட்டமிட்டு செயலாற்றி வருகிறார்கள். இதன் ஒரு பகுதியாக, தமிழ்நாடு முதல்அமைச்சரின் உத்தரவின்படி, சென்னையில் மெரினா கடற்கரை, பெசன்ட் நகர் கடற்கரைப் பகுதிகள், திருவான்மியூர், திருவொற்றியூர் கடற்கரைப் பகுதிகளிலும், பூங்காக்கள், விளையாட்டுத் திடல்கள் உள்ளிட்ட மக்கள் அதிகளவில் வந்து செல்லும் பகுதிகளில் மக்கள் தங்குதடையின்றி இணைய பயன்பாட்டினை மேற்கொள்ளும் வகையில் உயர்தரத்தில் இலவச வைபை (WIFI) வசதியினை ஏற்படுத்திட இதற்கான சேவைகளை வழங்கும் நிறுவனங்களான ஏர்டெல் (Airtel), ஜியோ (Jio), ஹாத்வே (Hathway) மற்றும் ஏசிடி (ACT) ஆகிய இணைய சேவை வழங்குநர்களுடன் மாநகராட்சி ஆணையாளர் ஆலோசனை மேற்கொண்டு அறிவுரைகள் வழங்கினார்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வங்கி கணக்கை கொடுத்து கமிஷன்.. ஆன்லைன் மோசடி கும்பலுக்கு உதவிய வாலிபர் கைது



ராமநாதபுரம், ஆக. 9

ராமநாதபுரம் அருகே வங்கி கணக்கை கொடுத்து கமிஷன் பெற்று ஆன்லைன் மோசடி கும்பலுக்கு உதவிய வாலிபர் கைது செய்யப்பட்டார்.

ராமநாதபுரம் மாவட்டத்தில் ஆன்லைன் மோசடி குற்றங்கள் அதிக அளவில் நடைபெற்று வருகிறது. மோசடியில் ஈடுபடும் கும்பல் போலீசாரிடம் இருந்து தப்பிக்க தங்கள் பணப்பரிவர்த்தனையை மேற்கொள்ள வங்கி கணக்குகளை கமிஷன் அடிப்படையில் வாங்கி மோசடிக்கு பயன்படுத்தி வருகின்றனர். இதனை சைபர் கிரைம் போலீசார் தீவிரமாக கண்காணித்து வருகின்றனர்.

இவ்வாறு பலர் மோசடி நபர்களின் பணத்தினை தங்களது வங்கி ஏ.டி.எம். மூலம் எடுத்து அவற்றை கிரிப்டோ கரன்சியாக மாற்றி அனுப்பும் செயலில் ஈடுபடுவதுதொடர்ந்துவருகிறது. இதனைகண்டறிந்த போலீசார் இதுபோன்ற குற்றவாளிகளை தொடர்ந்து கைது செய்து வருகின்றனர்.

இந்நிலையில் போலீஸ் சூப்பிரண்டு சந்தீஷ் உத்தரவின்பேரில் சென்னை இணையவழி குற்றப்பிரிவு போலீசாரின் தகவலின் அடிப்படையில் ராமநாதபுரம் கேணிக்கரை போலீசார் தீவிர விசாரணை மேற்கொண்டனர்.

அப்போது ராமநாதபுரம் அருகே வாணி கிராமத்தில் அமைந்துள்ள வங்கியில் ஒரு கணக்கில் இணைய மோசடியில் பெறப்பட்ட சட்டவிரோத பணத்தை பெற்று அதனை கிரிப்டோ கரன்சியாக மாற்றி மோசடி நபர்களுக்கு தொடர்ந்து அனுப்பி வருவதாக புகார் வந்தது.

இதுகுறித்து கேணிக்கரை போலீசார் அந்த வங்கி கணக்கிற்கான நபர் குறித்து விசாரணை மேற்கொண்டனர். அதில் அந்த வங்கி கணக்கு சாத்தான்குளம் பகுதியை சேர்ந்த தனசேகரன் (வயது 25) என்பவருடையது என தெரியவந்தது. மேலும் விசாரணையில் அவர் தனது வங்கி கணக்கு மூலம் ஆன்லைன் மோசடி பணத்தை பெற்று அதனை கிரிப்டோ கரன்சியாக மாற்றி கொடுத்து கமிஷன் பெற்று வந்ததாக போலீசார் தெரிவித்தனர். இதற்காக பெருந்தொகையை கமிஷனாக பெற்று சொகுசு வாழ்க்கை வாழ்ந்து வந்துள்ளார்.

இதைத்தொடர்ந்து தனசேகரனை போலீசார் கைது செய்தனர். அவரிடம் நடத்திய விசாரணையில், மோசடி நபர்களின் குற்றச்செயலுக்கு தனது வங்கி கணக்கை பயன்படுத்தி கமிஷன் பெற்றதும், மோசடி பணத்தை குற்ற செயல்களில் ஈடுபடுபவர்களின் கணக்கிற்கு கிரிப்டோ கரன்சியாக மாற்றி அனுப்புவதையும் வாடிக்கையாக வைத்திருப்பதாக தெரிவித்துள்ளார். கைது செய்யப்பட்ட தனசேகரன் கோர்ட்டில் ஆஜர்படுத்தப்பட்டு நிலையில் வருகிற 19ந்தேதி வரை சிறையில் அடைக்க நீதிபதி உத்தரவிட்டார்.

# பழனி கோவில் நில மோசடி வழக்கு: விசாரணையை சிபிஐ வசம் ஒப்படைக்க வேண்டும் டிடிவி தினகரன்



சென்னை, ஆக. 10

திருக்கோவில்களுக்கு சொந்தமான நிலங்கள் மோசடியாக பத்திரப்பதிவு செய்த வழக்கின் விசாரணையை சிபிஐ வசம் ஒப்படைக்க வேண்டும் என்று அமமுக பொதுச்செயலாளர் டிடிவி தினகரன் வலியுறுத்தியுள்ளார். இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:

பழனி முருகன் திருக்கோவிலுக்குச் சொந்தமான 100 கோடி ரூபாய் மதிப்புள்ள நிலத்தை போலி ஆவணங்கள் மூலமாக பத்திரப்பதிவு செய்த வழக்கில் கைதாகி மதுரை சிறையில் அடைக்கப்பட்டிருந்த வழக்கறிஞர் அன்வர்தீன் உடல்நல குறைவினால் பாதிக்கப்பட்டு உயிரிழந்திருப்பதாக செய்திகள் வெளியாகியுள்ளன. அதேபோல, இவ்வழக்கில் தொடர்புடைய சார்பதிவாளர் ஜஸ்டின் மணிகண்டன் உடல்நல குறைவால் அரசு மருத்துவமனையில் தீவிர சிகிச்சை பிரிவில் அனுமதிப்பட்டிருப்பதாகவும் செய்திகள் வருகின்றன.

பழனி திருக்கோவிலுக்குச் சொந்தமான நிலத்தை முறைகேடாக பதிவு செய்த அன்றைய தினமே, கோவிலுக்கு சொந்தமான மற்றொரு நிலம் தனிநபருக்கு பத்திரப்பதிவு, மதுரை மீனாட்சியம்மன் கோவில் நிலம் முறைகேடாக பதிவு செய்த வழக்கில் ஒருவர் கைது என அடுத்தடுத்து புகார்கள் குவிந்து வரும் சூழலில், பழனி திருக்கோவில் வழக்கில் கைதாகி சிறையில் அடைக்கப்பட்ட முக்கிய நபர் உயிரிழந்திருப்பதாக வெளியாகியிருக்கும் செய்திகள் பொதுமக்கள் மத்தியில் பெரும் சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளன.

ஏற்கனவே, தவெக ஆட்சியமைந்த பின் அடுத்தடுத்து காவல் மரணங்கள் நிகழ்ந்து வரும் நிலையில், கோவில் நிலம் பத்திரப்பதிவு தொடர்பான வழக்கில் கைதாகி சிறையில் அடைக்கப்பட்ட நபர் சிபிசிஐடி காவல் விசாரணையை முடித்து சிறை திரும்பிய நிலையில் திடீரென உயிரிழந்திருப்பதன் பின்னணியில், காவல்து றையினர் தாக்கியதில் உடல்நலக்குறைவு ஏற்பட்டு உயிரிழந்தாரா? அல்லது ஏற்கனவே அவருக்கு இருந்த உடல் உபாதைகளால் உயிரிழந்தாரா? உள்ளிட்ட அடுக்கடுக்கான கேள்விகளை எழுப்புகிறது.

எனவே, தமிழகத்தில் திருக்கோவில்களுக்கு சொந்தமான நிலங்கள் மோசடியாக பத்திரப்பதிவு செய்த வழக்கின் விசாரணையை சிபிஐ வசம் ஒப்படைத்து உண்மையை வெளிக்கொண்டு வர வேண்டும் என்று தவெக அரசை வலியுறுத்துகிறேன்.

இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

# காவிரி துரோகத்தை மறைக்கத் தவெக அரசு நடத்தும் திசைதிருப்பல் நாடகமே எம்.பி.க்கள் கூட்டம் திமுக



சென்னை, ஆக. 9

காவிரி துரோகத்தை மறைக்கத் தவெக அரசு நடத்தும் திசைதிருப்பல் நாடகமே எம்.பி.க்கள்கூட்டம் என்று திமுக ஐடி விங் கூறியுள்ளது.

இதுதொடர்பாக, திமுக ஐடி விங் வெளியிட்டுள்ள எக்ஸ் தள பதிவில் தெரிவித்திருப்பதாவது:

பாஜகவை எதிர்த்து பேசப் பயந்து, கடந்த ஆண்டு திமுக நடத்திய வாக்காளர் பட்டியல் சிறப்புத் திருத்தமுறை அனைத்துக் கட்சிக் கூட்டத்தைப் புறக்கணித்தவர் இந்த விஜய். தொகுதி மறுவரையறை ஆபத்தை முதன்முதலில் எதிர்த்து, மாநாடுகள் நடத்தி, நாடாளுமன்றத்தில் அந்த மசோதாவைத் தோற்கடித்தவர் திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் தான்!

இதில் தமிழ்நாட்டின் நிலைப்பாடு, தொகுதி மறுசீரமைப்பின் காரணமாக, நாடாளுமன்றத்தில் தமிழ்நாட்டின் தற்போதைய பிரதிநிதித்துவ சதவீதமான 7.18 என்பதை எக்காரணம் கொண்டும் மத்தியஅரசுமாற்றம்செய்யக்கூடாதுஎன்றுஏற்கனவே ஒருமனதாக நிறைவேற்றப்பட்டுவிட்ட நிலையில், இப்போது இந்த எம்.பி.க்கள் கூட்டத்திற்கான தேவை என்ன? காவிரி விவகாரத்தில் கர்நாடகக் காங்கிரஸிடம் உரிமையை அடகுவைத்துவிட்டு, டெல்டா விவசாயிகளின் போராட்டத்திலிருந்து தப்பிக்கவே இந்த அவசரத் தொகுதி மறுவரையறை நாடகத்தை அரங்கேற்றுகிறார் இந்த முதல்அமைச்சர்.

மேகதாது அணை விவகாரம் குறித்து அனைத்துக் கட்சிக் கூட்டம் கூட்டப்பட வேண்டும்; சட்டமன்றத் தீர்மானத்தை நமது எம்.பி.க்களுடன் சென்று மத்திய ஜல் சக்தி மந்திரிடம் நேரில் வழங்கத் தமிழ்நாடு அரசின் பிரதிநிதிகள் தயாரா? விவசாயிகளின் உரிமையை விற்றுவிட்டு, தவெக அரசு நடத்தும் எந்தக் கபட நாடகத்திலும் தி.மு.க. பங்கேற்காது. தமிழ்நாட்டின் நலனில் எங்களின் நிலைப்பாட்டில் எள்ளளவும் மாற்றமில்லை! இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தாம்பரத்தில் சம்பள உயர்வு கோரி தூய்மை பணியாளர்கள் போராட்டம்!



சென்னை, ஆக. 9

சென்னை தாம்பரம் மாநகராட்சி மண்டல அலுவலகத்தின் முன்பு அமர்ந்து தூய்மைப் பணியாளர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

தாம்பரம் மாநகராட்சிக்கு உட்பட்ட மண்டல அலுவலக வளாகத்தில் இன்று (சனிக்கிழமை) தூய்மைப் பணியாளர்கள் திரண்டனர். அவர்கள் தங்களின் வாழ்வாதாரக் கோரிக்கைகளை வலியுறுத்தி திடீரென வளாகத்தின் முன்பு அமர்ந்து போராட்டம் மற்றும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இதனால் அப்பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

முக்கிய கோரிக்கைகள் குற்றச்சாட்டுகள்

தங்களுக்கு தற்போது ஒரு நாளுக்கு வெறும் ரூ. 350 மட்டுமே சம்பளமாக வழங்கப்பட்டு வருவதாக பணியாளர்கள் குற்றம் சாட்டினர். இதனை உடனடியாக ரூ. 500 ஆக உயர்த்தி வழங்க வேண்டும் என அவர்கள் வலியுறுத்தினர். மேலும் தங்களுக்கு முறையான வார விடுமுறை வழங்கப்படுவதில்லை என்றும், விடுப்பு எடுப்பதில் பல்வேறு சிரமங்கள் இருப்பதாகவும் தூய்மைப் பணியாளர்கள் தெரிவித்தனர்.

இந்த நியாயமான கோரிக்கைகளை மாநகராட்சி நிர்வாகம் உடனடியாக பரிசீலித்து, உரிய தீர்வு காண வேண்டும் என போராட்டத்தில் ஈடுபட்டுள்ள தூய்மைப் பணியாளர்கள் கோரிக்கை விடுத்தனர்.

# 'பொன்னாடை போர்த்துவதை தவிர்த்து புத்தகங்களை கொடுக்கலாம்' நூல் வெளியீட்டு விழாவில் அமைச்சர் ராஜ்மோகன் பேச்சு



சென்னை, ஆக. 9

சென்னையில் நடைபெற்ற நூல் வெளியீட்டு விழாவில் தமிழக பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் ராஜ்மோகன் சிறப்பு விருந்தினராக பங்கேற்றார். இந்த விழாவில் அவர் பேசியதாவது;

"விழாக்களில் மரியாதை செய்யும்போது பொன்னாடை போர்த்துகிறார்கள். என்னுடைய வீட்டில் இப்போது மூட்டை மூட்டையாக பொன்னாடைகள் இருக்கின்றன. அவற்றை என்ன செய்வதென்று தெரியவில்லை. பொன்னாடைக்கு போர்த்துவதற்கு பதிலாக புத்தகங்களை பரிசாக கொடுக்க நாம் முயற்சி செய்யலாம்.

என்னுடைய வீட்டிலும், அலுவலகங்களிலும் ஏராளமான புத்தகங்கள் உள்ளன. ஏழை, எளிய வீட்டுப் பிள்ளையாக பிறந்த நான், பள்ளியில் ஒரு மக்கு மாணவனாகவே இருந்தேன். மெல்ல கற்கும் குழந்தையாக, தன் வேகத்தில் கற்கும் குழந்தையாக இருந்தேன். ஆனால் கிடைத்த எல்லா வாய்ப்புகளையும் பயன்படுத்தினேன். 50 பேர் முன்னால் பேசுவது மட்டும்தானா பேச்சு? 5 பேர் முன்னிலையில் கூட பேசினேன். சிறிய மேடை நிகழ்ச்சிகளை தொகுத்து வழங்கினேன்.

நான் அமைச்சராவேன் என்று கனவிலும் நினைத்தது இல்லை. ஆனால் என்னைப் பார்த்தவுடன் ஒருவர் என்னால் முடியும் என்று நம்பினார். தமிழக முதல்அமைச்சர் ஜோசப் விஜய் என்ற மாமனிதரால் இன்று நான் அமைச்சராகி இருக்கிறேன். கிடைத்த எல்லா வாய்ப்பிலும் எனக்கு வழித்துணையாக வந்தது புத்தகங்கள்தான். என் வீட்டில் பதக்கங்களோ, கோப்பைகளோ இருக்காது. ஆனால் எங்கு பார்த்தாலும் புத்தகங்கள் இருக்கும்."

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

# நெல்லையில் 2.2 கிலோ கஞ்சா, 2 பைக் பறிமுதல்: 2 வாலிபர்கள் கைது



திருநெல்வேலி, ஆக. 9

நெல்லை மாநகரம் பெருமாள்புரம், மேலப்பாளையம் பகுதிகளில் 2 கிலோ 250 கிராம் கஞ்சா, 2 செல்போன்கள், 2 பைக்குகளை பறிமுதல் செய்த போலீசார் 2 வாலிபர்களை கைது செய்தனர்.

திருநெல்வேலி மாநகரம், பெருமாள்புரம் மற்றும் மேலப்பாளையம் காவல்நிலைய எல்லைக்குட்பட்ட பகுதிகளில் போலீசார் வாகன சோதனையில் ஈடுபட்டிருந்தனர். அப்போது சந்தேகப்படும்படியான 2 வாலிபர்களை பிடித்து போலீசார் விசாரணை செய்தனர். அதில் அவர்கள் கஞ்சா பதுக்கி வைத்திருந்தது தெரியவந்தது.

இதனையடுத்து உயிருக்கு தீங்கு விளைவிக்கக்கூடிய போதை பொருளான கஞ்சா விற்பனைக்கு வைத்திருந்த வாலிபர்களான பெருமாள்புரத்தைச் சேர்ந்த சுகுமார் (வயது 23), மேலப்பாளையத்தைச் சேர்ந்த திவான்மைதீன்(22) ஆகிய 2 பேரிடமும் இருந்து மொத்தம் 2 கிலோ 250 கிராம் கஞ்சா, 2 செல்போன்கள் 2 பைக்குகள் ஆகியவற்றை போலீசார் பறிமுதல் செய்து வழக்குப்பதிவு செய்து அந்த வாலிபர்களை சிறையில் அடைத்தனர்.

தின கனி

09.08.2026

# ஆடி மாதத்தில் வீசும் பலத்த காற்று; குமரியில் காற்றாலை மின் உற்பத்தி அதிகரிப்பு




கன்னியாகுமரி, ஆக. 9

கன்னியாகுமரி மாவட்டத்தில் ஆடி மாதத்தையொட்டி பலத்த சூரைக்காற்று வீசி வருவதால் ஆரல்வாய்மொழி மற்றும் முப்பந்தல் பகுதிகளில் உள்ள காற்றாலைகளில் மின் உற்பத்தி இரண்டு மடங்கு வரை அதிகரித்துள்ளது.

வழக்கமான மாதங்களை விட காற்று தீவிரமாகவும், அதிக வேகமாகவும் வீசுவதால் 250 முதல் 750 கிலோ வாட் திறன் கொண்ட காற்றாலைகளில் மின் உற்பத்தி 3 ஆயிரம் முதல் 8 ஆயிரம் யூனிட் வரை உயர்ந்துள்ளது. எனினும், அவ்வப்போது பெய்து வரும் மழை காரணமாக மின் உற்பத்தியில் சிறு ஏற்றத்தாழ்வுகள் ஏற்படலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

# கோவில்களுக்குள் இனி செல்போன் கொண்டு செல்ல தடை: செப்டம்பர் 1ந்தேதி முதல் அமலுக்கு வருகிறது



சென்னை, ஆக. 9

தமிழகத்தில் கோவில்களுக்குள் செல்போன் கொண்டு செல்வதற்கான தடை செப்டம்பர் 1ந்தேதி முதல் முழுமையாக அமலுக்கு வர உள்ளது என இந்து சமய அறநிலையத்துறை தெரிவித்துள்ளது.

கோவில்களின் ஆன்மீக சூழல் மற்றும் அமைதியைபேணிக்காக்கும்வகையிலும், விதிகளுக்கு மதிப்பளிக்கும் வகையிலும் கோவிலுக்குள் செல்போன்களை பயன்படுத்த ஏற்கனவே கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டிருந்தன. இந்நிலையில், இந்த தடை உத்தரவு வரும் செப்டம்பர் 1ந்தேதி முதல் முழுமையாக அமலுக்கு வருகிறது.

இது தொடர்பாக அனைத்துக் கோவில் நிர்வாகங்களுக்கும் இந்துசமய அறநிலையத்துறை ஆணையர்தரப்பில் இருந்து அதிகாரப்பூர்வ சுற்றறிக்கை அனுப்பப்பட்டுள்ளது.

இதன்படி, இனி பக்தர்கள் மற்றும் பொதுமக்கள் யாரும் கோவிலுக்குள் செல்போன்களை எடுத்துச் செல்ல அனுமதியில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனைமீறிகோவிலுக்குள்செல்போன் கொண்டு செல்லப்பட்டு, அதன் மூலம் புகைப்படம் அல்லது வீடியோ எடுக்கப்பட்டால், சம்பந்தப்பட்டவர்கள்மீதுஉடனடியாககாவல்துறையில்புகார்அளிக்கப்படும் என்று எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அதே போல், வி.ஐ.பி.க்கள், சினிமா பிரபலங்கள் கோவில்களுக்கு வரும்போது அவர்களுடன் ஊடகத்தினர் அல்லது தனிப்பட்ட நபர்கள் சென்று வீடியோ அல்லது புகைப்படம் எடுப்பதை தவிர்க்க வேண்டும் எனவும் சுற்றறிக்கையில் அறிவுறுத்தப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

# ஒகேனக்கல்லில் காவிரி நீர்வரத்து சரிவு; சுற்றுலா பயணிகள் குளிக்கவும், பரிசல் இயக்கவும் அனுமதி!



தருமபுரி, ஆக. 9

ஒகேனக்கல் காவிரி ஆற்றில் நீர்வரத்து சீராகக் குறைந்ததைத் தொடர்ந்து, கடந்த 4 நாட்களாக விதிக்கப்பட்டிருந்த தடை நீக்கப்பட்டு, சுற்றுலா பயணிகள் குளிப்பதற்கும் பரிசல் இயக்குவதற்கும் மாவட்ட நிர்வாகம் அனுமதி வழங்கியது.

தருமபுரி மாவட்டம் ஒகேனக்கல்லில், காவிரியின் நீர் பிடிப்புப் பகுதிகளில் பெய்த கனமழையால் ஆற்றில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. இதனால் கடந்த 4 நாட்களாக சுற்றுலா பயணிகள் குளிக்கவும் பரிசல் இயக்கவும் தடை விதிக்கப்பட்டிருந்தது.

ஒகேனக்கல் காவிரி ஆற்றில் இன்று (சனிக்கிழமை) நீர்வரத்து கணிசமாகக் குறைந்துள்ளது. இதையடுத்து சுற்றுலா பயணிகளின் பாதுகாப்பு உறுதி செய்யப்பட்டு பரிசல் இயக்கவும், குறிப்பிட்ட பாதுகாப்பான பகுதிகளில் குளிக்கவும் அதிகாரிகள் அனுமதி அளித்தனர்.

விடுமுறை தினமான சனிக்கிழமை, இந்த அறிவிப்பு வெளியாகி உள்ளதால் ஒகேனக்கல்லுக்கு வரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. இதனால் பரிசல் ஓட்டிகளும், உள்ளூர் வியாபாரிகளும் பெரும் மகிழ்ச்சிஅடைந்தனர். பாதுகாப்புப்பணியில்போலீசாரும், தீயணைப்புத் துறையினரும் தொடர்ந்து தீவிர கண்காணிப்பில் ஈடுபட்டு வருகின்றனர்.

# நீண்ட தூர அரசு பேருந்துகளில் ரூ.10க்கு ‘பயணி’ குடிநீர் பாட்டில்



சென்னை, ஆக. 9

அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்தின் நீண்ட தூர பேருந்துகளில் பயணிகளுக்கு ரூ.10 க்கு சுத்திகரிக்கப்பட்ட ‘பயணி’ குடிநீர் பாட்டில் வழங்கும் திட்டம் நேற்று தொடங்கப்பட்டது. சென்னை பல்லவன் இல்லத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் போக்குவரத்துத்துறை அமைச்சர் விஜய்தமிழன்பார்த்திபன்திட்டத்தைதொடங்கி வைத்தார்.

தமிழகத்தில் அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம் சார்பில் 1,080க்கும் மேற்பட்ட விரைவு மற்றும் குளிர்சாதன வசதி கொண்ட பேருந்துகள் இயக்கப்படுகின்றன. இவற்றில் தினமும் ஒரு லட்சத்துக்கும் மேற்பட்ட பயணிகள் பயணம் செய்து வருகின்றனர். கடந்த 2013ஆம் ஆண்டு ‘அம்மா குடிநீர்’ திட்டத்தின் கீழ் ரூ.10க்கு ஒரு லிட்டர் குடிநீர் பாட்டில் விற்பனை செய்யப்பட்டது. கும்மிடிப்பூண்டி அரசு குடிநீர் உற்பத்தி நிலையத்தில் ஏற்பட்ட தொழில்நுட்பக் கோளாறு உள்ளிட்ட காரணங்களால் 2021 ஆம் ஆண்டு இத்திட்டம் நிறுத்தப்பட்டது.

இந்நிலையில், நீண்டதூரப் பேருந்து பயணிகளின் வசதிக்காக ‘பயணி’ என்ற பெயரில் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் ரூ.10க்கு வழங்கும் திட்டம் தற்போது மீண்டும் தொடங்கப்பட்டுள்ளது. முதல்கட்டமாக விரைவுப் போக்குவரத்துக் கழகத்தின் நீண்டதூர பேருந்துகளில் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

# மேட்டூர் அணையின் நீர்மட்டம் 4 நாளில் 4½ அடி உயர்வு



சேலம், ஆக. 9

கர்நாடக அணைகளில் இருந்து திறந்து விடப்பட்ட தண்ணீர் கடந்த 4ந்தேதி இரவு மேட்டூர் அணையை வந்தடைந்தது. இதனால் மேட்டூர் அணையின் நீர்மட்டம் படிப்படியாக அதிகரிக்க தொடங்கியது. நேற்று முன்தினம் அணைக்கு வினாடிக்கு 19 ஆயிரத்து 264 கனஅடி வீதம் தண்ணீர் வந்து கொண்டிருந்தது. கர்நாடக அணைகளில் இருந்து திறக்கப்படும் தண்ணீரின் அளவு குறைந்ததால் மேட்டூர் அணைக்கு நீர்வரத்து குறைய தொடங்கியது. அதன்படி நேற்று மாலை 4 மணி நிலவரப்படி மேட்டூர் அணைக்கு நீர்வரத்து வினாடிக்கு 13 ஆயிரத்து 674 கனஅடியாக குறைந்தது.

அணையின் நீர்மட்டம் 77.57 அடியாக உயர்ந்தது. அணையில் இருந்து வினாடிக்கு 1,500 கனஅடி தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளது. கடந்த4ந்தேதிஅணையின்நீர்மட்டம் 73.08 அடியாக இருந்தது. கடந்த 4 நாட்களில் மேட்டூர் அணையின் நீர்மட்டம் 4½ அடி உயர்ந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

# பெரம்பூர்: கார் டிரைவரை கத்தியால் வெட்டிய 4 பேர் கைது

பெரம்பூர், ஆக. 9

முன்விரோதம் காரணமாக கார் டிரைவரை கத்தியால் வெட்டிய 4 பேரை போலீசார் கைது செய்தனர்.

சென்னை ஏழுகிணறு தையப்பன் தெருவைச் சேர்ந்தவர் முகம்மது செரிப் (வயது 47). கார் டிரைவரான இவருக்கும், மண்ணடி இப்ராகிம் தெருவைச் சேர்ந்த சாதிக் அலி (45) என்பவருக்கும் இடையே முன்விரோதம் இருந்து வந்தது. நேற்று முன்தினம் காலை முகம்மது செரிப் தனது வீட்டின் அருகே நடந்து சென்று கொண்டிருந்தார்.

அப்போது 2 மோட்டார் சைக்கிள்களில் வந்த 5 பேர், அவரை வழிமறித்து, சாதிக் அலி குடும்பத்தினரிடம் ஏன் பிரச்சினை செய்கிறாய்? என கேட்டு கத்தியால் அவரை சரமாரியாக வெட்டியதுடன், கொலை மிரட்டல் விடுத்துவிட்டு தப்பிச்சென்றனர்.

இதில் பலத்த காயமடைந்த முகம்மது செரிப், சென்னை ஸ்டான்லிஅரசுஆஸ்பத்திரியில்சிகிச்சைபெற்றுவருகிறார். இதுகுறித்த புகாரின்பேரில் முத்தியால்பேட்டை போலீசார் கொலை முயற்சி வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தினர். பின்னர் சம்பவம் தொடர்பாக சாதிக் அலி, பைசல் ரகுமான் (32), மைதீன் (37), அப்துல் காசிம் (35) ஆகிய 4 பேரை கைது செய்த போலீசார். இந்த சம்பவத்தில் தொடர்புடைய மற்றொருவரை தேடி வருகின்றனர்

# மக்களுக்கு தடையின்றி குடிநீர் வழங்க ரூ.288.97 கோடி ஒதுக்கீடு: தமிழக அரசு உத்தரவு




சென்னை, ஆக. 9

தமிழகத்தில் தென்மேற்கு பருவமழை எதிர்பார்த்த அளவில் இல்லாததாலும், மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் நிலவும் கடும் வறட்சி மற்றும் வறண்ட வானிலை காரணமாகவும் குடிநீர் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

இந்த சூழலில், பொதுமக்களுக்கு தடையின்றி குடிநீர் வினியோகம் செய்வதை உறுதி செய்யும் வகையில், போர்க்கால அடிப்படையில் குடிநீர் வினியோகப் பணிகளைமேற்கொள்ளதிட்டமிடப்பட்டுள்ளது. மேலும், ஏற்கனவே மேற்கொள்ளப்பட்ட பணிகளை நிறைவு செய்யவும் மாநில பேரிடர் நிவாரண நிதியிலிருந்து ரூ.288.97 கோடி நிதியை ஒதுக்கீடு செய்து தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது.

இது தொடர்பாக வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. இந்த நிதி ஒதுக்கீடு தொடர்பான செலவினங்கள், 20262027ம் ஆண்டிற்கான திருத்தப்பட்ட மதிப்பீட்டில் சேர்க்கப்பட இருக்கிறது. இந்தபணிகள்அனைத்தும்வறட்சிகாலங்களில் பொதுமக்களுக்கு தடையின்றி குடிநீர் கிடைப்பதை உறுதி செய்யும் நோக்கில் மேற்கொள்ளப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மது பாட்டிலுக்கு ரூ.20 உயர்கிறதா..? சட்டசபையில் மசோதா தாக்கல்




சென்னை, ஆக. 9

மதுபானங்கள்மீது ‘சுற்றுச்சூழல் மற்றும் சமூக நலத்தீர்வை’ என்ற புதிய வரியை விதிக்க தமிழ்நாடு அரசு முடிவு செய்துள்ளது. மதுப் பழக்கத்திற்கு அடிமையானவர்க ளுக்கான மறுவாழ்வு மற்றும் மதுப்பழக்க மீட்புத் திட்டங்களுக்கு இந்த வரி பயன்படுத்தப்படஉள்ளது.தமிழகத்தில், 'டாஸ்மாக்' கடைகள் வாயிலாக, மதுபாட்டில்கள் விற்பனை செய்யப்படுகின்றன. இதில் விற்பனைக்கு பின் காலி மது பாட்டில்களை மறுசுழற்சி செய்வதில் பிரச்னை எழுகிறது. இதை கட்டுப்படுத்த புதிதாக வரி விதிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில் தமிழகத்தில் விற்பனை செய்யப்படும் மது பாட்டில் ஒன்றுக்கு, 20 ரூபாய்க்கு மிகாமல், சுற்றுச்சூழல் மற்றும் சமூக நலத்தீர்வை விதிக்க தமிழக அரசு முடிவு செய்துள்ளது. இதற்காக மதிப்புக்கூட்டு வரி சட்டத்தில் திருத்தம் செய்யவும் முடிவு செய்துள்ளது. இதற்காக, மதிப்புக்கூட்டு வரி சட்டத்தில் திருத்தம் செய்வதற்கான மசோதா சட்ட சபையில் நேற்று தாக்கல் செய்யப்பட்டது. தமிழகத்தில் மது விற்கும் வணிகர்கள், இந்த தீர்வை வரி செலுத்த பொறுப்பாகிறார்கள். மதுபான வகைகள், அளவுகளைபொறுத்தும், மதுபானம் அடங்கிய கொள்கலன் அதாவது பாட்டிலின் வகையை பொறுத்தும், வெவ்வேறு கட்டண வீதங்களை குறிப்பிடலாம். இவ்வாறு கிடைக்கும் வருவாயை, மதுபான பாட்டில்களைமறுசுழற்சி முறையில் அப்புறப்படுத்தவும், மறு பயன்பாட்டை எளிதாக்கவும் பயன் படுத்தலாம். மது பழக்கத்துக்கு அடிமையானவர் களுக்கான மறுவாழ்வு மற்றும் மதுப்பழக்க மீட்பு திட்டங்களை செயல்படுத்தவும் பயன்படுத்தலாம். மது பழக்க அடிமைத் தனத்தால் பாதிக்கப்பட்ட நபர்களின் குடும்பங்களுக்கான நலத்திட்டங்களை செயல்படுத்த பயன்படுத்தலாம். மது அருந்துவதால் ஏற்படும் தீய விளைவுகள் குறித்த விழிப்புணர்வு பிரசாரங்களுக்கும் பயன்படுத்தலாம். சூழலியல், காடுகள் மற்றும் வன விலங்குகள் பாதுகாத்தல் மற்றும் மீட்பு பணிகளுக்கும் பயன்படுத்தப்படும். இந்த நோக்கத்துக்காக, 2006ம் ஆண்டு மதிப்புக்கூட்டு வரிச்சட்டத்தில் திருத்தம் செய்யப்படுகிறது. முன்னதாக வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் த.லோகேஷ் தமிழ்செல்வன் அளித்த விளக்க உரையில் இதுதொடர்பாக தெரிவிக்கப்பட்டிருந்தது.

# நீலகிரி: தேயிலை தோட்டத்தில் சிறுத்தை உலா தொழிலாளர்கள் பீதி

நீலகிரி மாவட்டம் பந்தலூர் அருகே மேங்கோரேஞ்ச், செம்மன் வயல், கல்லட்டி, இந்திரா நகர், இண்கோநகர், இரும்பு பாலம் உள்ளிட்ட பகுதிகளில் சிறுத்தை இரவு நேரங்களில் ஊருக்குள் புகுந்து ஆடு, மாடுகள், வளர்ப்பு நாய்களை வேட் டையாடி வருகிறது. இந்தநிலையில் நேற்று முன்தினம் இரவு மேங்கோ ரேஞ்ச் பகுதியில் சைனி என்பவரது வீட்டின் அருகே உள்ள தேயிலை தோட்டத்தில் சிறுத்தை உலா வந்தது.

இதனால் வீட்டில் இருந்தவர்கள் பீதி அடைந்தனர். மேலும் தனியார் தேயிலை தொழிற்சாலையில் பணி முடிந்து வீட்டிற்கு புறப்பட்ட தொழிலாளர்களும் அச்சம் அடைந்தனர். எனவே, சிறுத்தையை கூண்டு வைத்து பிடித்து அடர்ந்த வனப்பகுதியில் விட வேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். இதைத்தொடர்ந்து தேவாலா வனத்துறையினர் கண்காணிப்பு பணியில் ஈடுபட்டு உள்ளனர்.

# தொகுதி மறுசீரமைப்பு அனைத்துக் கட்சி எம்.பி.க்கள் கூட்டம் நல்ல தொடக்கம் மாணிக்கம் தாகூர்



சென்னை விமான நிலையத்தில் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவர் மாணிக்கம் தாகூர் செய்தியாளர்களை சந்தித்து பேசினார். அப்போது அவர் கூறுகையில்,தமிழக அரசின் பட்ஜெட்டில் புதிதாகக் கூறுவதற்கு பெரிதாக எதுவும் இல்லை. பட்ஜெட் மீதான விவாதம் தொடங்கியபோதே காங்கிரஸ் தரப்பில் கருத்து தெரிவிக்கப்பட்டுவிட்டது. தமிழகத்தின் தற்போதைய நிதி நிலையை கருத்தில் கொண்டு பார்க்கும்போது, தேர்தலுக்கு முன்பு அளித்த வாக்குறுதிகளில் குறிப்பாக பெண்கள் தொடர்பான முக்கியமான வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்கான நடவடிக்கைகளை அரசு தொடங்கியுள்ளது. அந்த வகையில் பட்ஜெட்டின் தொடக்கம்நல்லநிலையில்உள்ளது. தொகுதிமறுசீரமைப்பு தொடர்பாகமுதலமைச்சர்விஜய்தலைமையில்அனைத்துக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களின் கூட்டம் நடைபெறவுள்ளது. இந்தக்கூட்டத்தைகாங்கிரஸ்கொடுத்த அழுத்தத்தின் காரணமாகத்தான் முதலமைச்சர் கூட்டியுள்ளார் என்று கூறுவது தவறானது. காங்கிரஸ் யாருக்கும் அழுத்தம் கொடுக்கவில்லை. காங்கிரஸைப் பொறுத்தவரை அழுத்தம் கொடுக்கும் கட்சி அல்ல. பாமக தலைவர்அன்புமணிராமதாஸுக்குஉண்மையில்அழுத்தம் இருக்கலாம். அது பாஜகவிடமிருந்தோ, பிரதமர் நரேந்திர மோடியிடமிருந்தோ இருக்கலாம். தொகுதி மறுசீரமைப்பு விவகாரத்தில் பிரதமர் மோடி, மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா ஆகியோர் கொண்டு வரும் நடவடிக்கையை அன்புமணி ராமதாஸ் ஆதரிப்பாரா என்பதுதான் அவரிடம் கேட்க வேண்டிய கேள்வி.தமிழகத்தின் உரிமைகளைப் பறிக்கும் வகையில் தொகுதி மறுசீரமைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதை எதிர்த்து அன்புமணி ராமதாஸ் பேசவேண்டும். ஆனால், அதுகுறித்து பேசாமல் இருக்கும் கட்சிகளில் அவரது கட்சியும் முக்கியமான ஒன்றாக உள்ளது. எனவே, முதலில் இதுகுறித்து அவர் தனது நிலைப்பாட்டை தெளிவுபடுத்த வேண்டும்.தமிழக முதலமைச்சர் விஜயை பொறுத்தவரை, யாருடைய அழுத்தத்துக்கும் அவர் பணிந்து செயல்படக்கூடியவர் அல்ல. தொகுதி மறுசீரமைப்பு தொடர்பாக அனைத்துக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களையும் அழைத்து ஆலோசனை நடத்த வேண்டும் என்ற தெளிவான முடிவை அவர் எடுத்துள்ளார்.கூட்டணிக் கட்சிகளை மட்டும் அழைத்திருந்தால் காங்கிரஸ், கம்யூனிஸ்ட் கட்சிகள், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, விடுதலைச் சிறுத்தைகள் கட்சி, மறுமலர்ச்சிதிராவிட முன்னேற்றக்கழகம் உள்ளிட்ட கூட்டணிக் கட்சிகளைச் சேர்ந்த 21 நாடாளுமன்ற உறுப்பினர்களை மட்டும் அழைத்திருக்கலாம். ஆனால், முதலமைச்சர் அனைத்துக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களையும் அழைத்துள்ளார். இது நல்ல தொடக்கம்.தான் 2009ஆம் ஆண்டு முதல் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்து வருவதாகவும், இதுவரை தான் பார்த்த ஐந்து முதலமைச்சர்களில் யாரும் அனைத்துக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களையும் அழைத்து ஒரு முக்கியமான விவகாரம் குறித்து ஆலோசனை நடத்தியதில்லை அந்த வகையில் முதல்முறையாக அனைத்துக் கட்சி எம்.பி.க்களையும் அழைத்து தொகுதி மறுசீரமைப்பு குறித்து ஆலோசனை நடத்துவது வரவேற்கத்தக்கது.தமிழகத்தின் வருங்காலத்தை தீர்மானிக்கக்கூடிய மிக முக்கியமான விவகாரம் தொகுதி மறுசீரமைப்பு. இதுபோன்ற ஒரு முக்கியமான நடவடிக்கையைமுதலமைச்சர்மேற்கொள்ளும்நிலையில், அதனை அன்புமணி ராமதாஸ் கொச்சைப்படுத்துவது வருத்தமளிக்கிறது.காவிரி, மேகதாது விவகாரங்களைப் பொறுத்தவரை அன்புமணி ராமதாஸ் அரசியல் செய்வதற்காக தொடர்ந்து பேசிக் கொண்டிருக்கிறார். காவிரி விவகாரத்தில் கர்நாடகத்தைச் சேர்ந்த பாஜக தலைவர்கள், துணை முதலமைச்சர் டி.கே.சிவகுமார் உள்ளிட்டோர் தண்ணீர் திறக்க முடியாது என்று கூறி வந்தனர். ஆனால், இயற்கை மற்றும் காவிரி தாயை யாராலும் தடுத்து நிறுத்த முடியாது. தற்போது காவிரியில் தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது.காவிரி விவகாரத்தில் அனைத்துக் கட்சிக் கூட்டம் நடத்த வேண்டும் என்று தொடர்ந்து வலியுறுத்தப்பட்டு வருகிறது. ஆனால், காவிரிக்காக ஏற்கெனவே சட்டப்பேரவையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. போராட்டங்களும் நடைபெற்று வருகின்றன. தற்போது தண்ணீரும் வந்துவிட்ட நிலையில், மீண்டும் அனைத்துக் கட்சிக் கூட்டம் நடத்த வேண்டிய அவசியம் என்ன என்ற கேள்வி எழுகிறது.ஒருவரது அரசியல் ஈகோவுக்காக அனைத்துக் கட்சிக் கூட்டத்தை நடத்த வேண்டிய அவசியம் இல்லை. தற்போது தமிழ்நாட்டுக்கு மிகவும் முக்கியமான பிரச்னை தொகுதி மறுசீரமைப்பு. மத்திய அரசு கொண்டு வரவுள்ள தொகுதி மறுசீரமைப்பு நடவடிக்கையின் மூலம் தமிழகத்தில் உள்ள நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையை குறைத்து, அவர்களின் அரசியல் பிரதிநிதித்துவத்தை பாதிக்கும் சதி நடைபெறுகிறதா என்பது குறித்து விவாதிக்க வேண்டிய நிலை உள்ளது. மேகதாது அணை விவகாரம் தொடர்பாக தமிழக அரசு நீதிமன்றத்தை நாடியுள்ளது. மேகதாது அணையை கட்டுவதற்கு மத்திய அரசு ஒப்புதல் அளிக்க வேண்டும். எனவே, மேகதாது அணை கட்டப்படக் கூடாது என்று கூறும் அன்புமணி ராமதாஸ், அவருக்கு ஆதரவளித்து வரும் மத்திய அரசிடம் தனது எதிர்ப்பை தெரிவிக்க வேண்டும்.அன்புமணி ராமதாஸ் சில நாள்களுக்கு முன்பு டெல்லியில் இருந்தார். அப்போது பிரதமர் நரேந்திர மோடியை சந்தித்து, மேகதாது அணை கட்ட அனுமதி அளித்தால் மத்திய அரசுக்கான தனது ஆதரவை திரும்பப் பெறுவேன் என்று ஏன் தெரிவிக்கவில்லை என்ற கேள்வி எழுகிறது.தமிழகத்துக்கு நல்லது செய்ய வேண்டும் என்று நினைக்கும் முதலமைச்சர் விஜய்க்கு அனைவரும் ஆதரவு அளிக்க வேண்டும். காவிரி மற்றும் மேகதாது போன்ற விவகாரங்களைவைத்துதேவையற்றஅரசியல்செய்வதைத் தவிர்க்க வேண்டும்.குறுவை சாகுபடிக்கு தண்ணீர் கிடைக்காத நிலை ஏற்பட்டது தொடர்பாக அரசியல் பேசிக் கொண்டிருந்ததே காரணம். தற்போது தண்ணீர் வந்துள்ள நிலையில், சம்பாசாகுபடிக்காவது உரிய நேரத்தில் தண்ணீர் திறந்து விடப்பட வேண்டும். தமிழகத்தில் சரியான நேரத்தில் போதிய மழை பெய்து விவசாயிகளுக்கு நஷ்டம் ஏற்படாத நிலை உருவாக வேண்டும்.அன்புமணி ராமதாஸ் தொடர்ந்து செல்ஃபி வீடியோக்களை வெளியிடுவதிலும், அரசியல் செய்வதிலும் கவனம் செலுத்துவதற்குப் பதிலாக விவசாயிகளின் நலனில் கவனம் செலுத்த வேண்டும். அரசியல் கருத்துகளுக்கு முக்கியத்துவம் அளித்து விவசாயிகளின்பிரச்னையை திசைதிருப்பினால் இறுதியில் பாதிக்கப்படுவது விவசாயிகள்தான்.மேகதாது அணை விவகாரத்தில்பிரதமர்நரேந்திரமோடி,தமிழகமுதலமைச்சர் விஜய் கர்நாடக துணை முதலமைச்சர் டி.கே.சிவகுமார் ஆகிய மூவருக்கும் தொடர்பு உள்ளது. அணைகட்டுவதற்கு மத்திய அரசின் ஒப்புதல் அவசியம். தமிழக அரசிடமும் ஒத்துழைப்பு கோரப்பட வேண்டும். கர்நாடகத்தில் அணையை கட்ட வேண்டிய பொறுப்பு அங்குள்ள அரசுக்கு உள்ளது.எனவே, மேகதாது அணை கட்டப்படக் கூடாது என்று அன்புமணி ராமதாஸ் விரும்பினால், முதலில் பிரதமர் நரேந்திர மோடியைச் சந்தித்து தனது எதிர்ப்பைத் தெரிவிக்க வேண்டும். அதனைச் செய்யாமல் மற்ற தலைவர்களைப் பற்றி விமர்சிப்பதில் எந்தப் பயனும் இல்லை.ராகுல் காந்தி, பிரகாஷ் காரத், உத்தவ் தாக்கரே, மம்தாபானர்ஜி உள்ளிட்ட தலைவர்களைசந்திப்பதைவிட, மேகதாது அணை விவகாரத்தில் முடிவெடுக்கும் அதிகாரம் யாரிடம் இருக்கிறதோ அவர்களிடம் பேசுவதே முக்கியம். பிரதமர், கர்நாடக முதலமைச்சர், தமிழக முதலமைச்சர் ஆகியோருடன் தொடர்புடைய பிரச்னை இது.காவிரியில் தற்போது தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது. கர்நாடக அரசியல்வாதிகள் தண்ணீர் திறக்க மாட்டோம் என்று தொடர்ந்து கூறி வந்த நிலையில், இயற்கையாக பெய்த மழையால் அணைகளில் நீர்வரத்து அதிகரித்து தண்ணீர் திறக்க வேண்டிய சூழல் ஏற்பட்டுள்ளது. இதனால் காவிரியில்தண்ணீர்வந்துகொண்டிருக்கிறது.சென்னையில் இருந்து கொண்டு தண்ணீர் வர வேண்டிய அளவு, வழங்க வேண்டிய அளவு குறித்து தொடர்ந்து பேசுவதைவிட, சம்பந்தப்பட்ட இடங்களுக்கு சென்று காவிரியில் தண்ணீர் வந்து கொண்டிருக்கிறதா என்பதை நேரில் பார்ப்பதே முக்கியம். தண்ணீர் வரத் தொடங்கியுள்ள நிலையில், ஏற்கெனவே கூறிய அரசியல் கருத்துகளை மீண்டும் மீண்டும் பேசிக் கொண்டிருப்பதில் பயனில்லை.திமுக ஆட்சியில் ஏற்கெனவே செயல்படுத்தப்பட்ட திட்டங்களின் பெயர்களை மாற்றி புதிய திட்டங்களாக அறிவிப்பதாக அதிமுக தரப்பில் கூறப்படுவது குறித்த கேள்விக்கு பதிலளித்த அவர், ஒரு திட்டத்தின் பெயர் மாற்றப்பட்டாலும் அது தொடர்ந்து செயல்படுத்தப்படுகிறதா என்பதுதான் முக்கியம். திட்டம் நிறுத்தப்பட்டால் மட்டுமே அதுகுறித்து கேள்வி எழுப்ப முடியும். திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வரும் நிலையில் பெயர் மாற்றத்தை மட்டும் விமர்சிப்பதில் பயனில்லை என்றார்.மக்களைப் பொறுத்தவரை திட்டத்தின் பெயர் முக்கியமல்ல; அந்தத் திட்டத்தின் மூலம் அவர்களுக்கு பயன் கிடைக்கிறதா என்பதுதான் முக்கியம். காங்கிரஸ் ஆட்சியில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டம் என்ற பெயரில் செயல்படுத்தப்பட்ட திட்டத்தை பொதுமக்கள் 100 நாள் வேலை என்றே அழைக்கின்றனர். பெயர் எதுவாக இருந்தாலும் மக்களுக்கு வேலை கிடைக்க வேண்டும் என்பதுதான் முக்கியம்.மின்சாரக் கட்டண உயர்வு குறித்து கவனம் செலுத்த வேண்டியது அவசியம். மின்சாரக் கட்டணம் அதிகரித்துள்ளது என்ற கருத்து தொடர்ந்து மக்களிடையே இருந்து வருகிறது. இதன் தாக்கம் பெரிய அளவில் இருக்கக்கூடும். எனவே, மின்சாரத் துறை அமைச்சர் இதுகுறித்து உரிய கவனம் செலுத்துவார் என்று நம்புகிறேன்.மத்திய பட்ஜெட்டில் நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன்திருக்குறள்அல்லதுதமிழ்நூல்களைமேற்கோள் காட்டிப் பேசுவது தொடர்பான கேள்விக்கு, அவ்வாறு மேற்கோள் காட்டும்போது பார்த்துக் கொள்ளலாம். நடக்காத ஒரு விஷயத்தை முன்கூட்டியே பேசுவது சரியாக இருக்காது. முதலில் அது நடக்கட்டும்; அதன்பிறகு அது குறித்து கருத்து தெரிவிக்கலாம் என இவ்வாறு கூறினார்.

தினகனி

NAMADHU DHINA KANI DAILY MORNING NEWSPAPER
PRESS REGISTER GENERAL OF INDIA
PRGI NO TNTAM/2023/88253

09.08.2026

# கனிமொழி எம்.பி.யிடம் திருமண அழைப்பிதழ் வழங்கல்



சென்னை, ஆக. 9

சென்னை வடகிழக்கு மாவட்டம், திருவொற்றியூர் கிழக்குப் பகுதி மாவட்ட கழக பிரதிநிதி ஆர்.நரேந்திரகுமார் என்கிற ரஜினிபாபுவின் இல்லத் திருமண வரவேற்பு விழாவிற்கான அழைப்பிதழ், கழக துணைப் பொதுச்செயலாளரும் நாடாளுமன்ற குழுத் தலைவருமான கனிமொழி கருணாநிதி எம்.பி.யிடம் வழங்கப்பட்டது.மாவட்டகழகசெயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் முன்னிலையில் அழைப்பிதழ் வழங்கப்பட்டது. நிகழ்வில் திருவொற்றியூர் கிழக்குப் பகுதி செயலாளர் தி.மு.தனியரசு, மாவட்ட கழக பிரதிநிதி நந்திவர்மன், வழக்கறிஞர் பாஸ்கர் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

# தாம்பத்தியத்துக்கு அழைத்த கணவன்.. ரீல்ஸ் பார்த்துக்கொண்டிருந்த மனைவி..அடுத்த நடந்த திகில் சம்பவம்



கும்பலகோடு, ஆக. 9

பெங்களூரு அருகே இளம்பெண் கொலையில் கணவர் கைது செய்யப்பட்டார். தாம்பத்தியத்துக்கு மறுத்து ரீல்ஸ் வீடியோ பார்த்ததுடன், உணவும் சமைத்து கொடுக்காததால் தீர்த்துக்கட்டியது அம்பலமாகி உள்ளது.

கர்நாடக மாநிலம் பெங்களூரு அருகே கும்பலகோடு போலீஸ் எல்லைக்கு உட்பட்ட கேருபாளையாவில் வாடகை வீட்டில் வசித்து வந்த வர் தீரஜ்குமார் (வயது 24). இவரது மனைவி ரீமாகுமாரி (20). இவர்களது சொந்த ஊர் பீகார் மாநிலம் ஆகும். தீரஜ் குமார். இங்குள்ள தொழிற்சாலையில் வேலை பார்த்து வந்தார்.

கடந்தமாதம்(ஜூலை)29ந்தேதிரீமாகுமாரி பூட்டிய வீட்டுக்குள் அழுகிய நிலையில் கொலை செய்யப்பட்டு இருந்தார். அவரது உடலை போர்வையால் சுற்றி வைத்துவிட்டு தீரஜ்குமார் தப்பி ஓடிஇருந்தார். இதுகுறித்து கும்பலகோடு போலீசார் வழக்குப்பதிவு செய்து தீரஜ்குமாரை தேடிவந்தனர்.

இந்த நிலையில், பீகாரில் தலைமறைவாக இருந்த தீரஜ்குமார் கைது செய்யப்பட்டார். அவரை பெங்களூருவுக்கு அழைத்து வந்து விசாரித்ததில் பரபரப்பு தகவல்கள் வெளியாகி உள்ளது.

ரீமாகுமாரியை தீரஜ்குமார் உயிருக்கு உயிராக காதலித்துள் ளார். இதனால் பெற்றோர் எதிர்ப்பையும் மீறி ரீமாகுமாரியை பெங்களூருவுக்கு அழைத்து வந்து திருமணம் செய்திருந்தார். ஆனால் திருமணத்துக்கு பின்பு ரீமாகுமாரியின் நடவடிக்கையில் மாற்றம் ஏற்பட்டது. அதாவது கணவர் தீரஜ்குமாரிடம் பேசாமல் எப்போதும் செல்போனில் ரீல்ஸ் வீடியோ பார்ப்பதில் மட்டுமே ரீமாகுமாரி ஆர்வம் காட்டி வந்துள்ளார்.

குறிப்பாக தீரஜ்குமாருடன் தாம்பத்தியத்தில் ஈடுபட ரீமாகுமாரி மறுத்துள்ளார். அத்துடன் தனக்கு மட்டுமே உணவு சமைத்து ரீமாகுமாரி சாப்பிட்டுள்ளார். கணவருக்கு எந்த உணவும் சமைத்து கொடுக்காமல் இருந்து வந்துள்ளார். இந்த விவகாரங்கள் தொடர்பாக தம்பதி இடையே அடிக்கடி தகராறு ஏற்பட்டுள்ளது. இதனால் பெங்களூரு வேண்டாம். பீகாருக்கே சென்று விடலாம் என ரீமாகுமாரி கூறி தகராறு செய்து வந்துள்ளார்.

இந்த நிலையில் கடந்த மாதம் 27ந்தேதி இரவு வேலைக்கு சென்று வந்த தீரஜ்குமார் சாப் பிட உணவு கேட்டுள்ளார். தான் சமைக்கவில்லை என்றும், ஓட்டலில் வாங்கி சாப்பிடும்படி யும் ரீமாகுமாரி கூறியுள்ளார். அதன்பிறகு. தாம்பத்தியத்தில் ஈடுபட தீரஜ்குமார் அழைத்துள் ளார். இதனை ரீமாகுமாரி நிராகரித்துள்ளார். இதன்காரணமாக தம்பதி இடையே வாக்குவாதம் உண்டானது.

அப்போது வீட்டில் கிடந்த உருட்டுக்கட்டையால் தீரஜ்குமாரை ரீமாகுமாரி தாக்கியுள்ளார். இதனால் ஆத்திரமடைந்த தீரஜ்குமார் துப்பட்டாவால் ரீமாகுமாரியின் கழுத்தை இறுக்கியும், வாயில் பாலிதீன் பையால் முகத்தை சுற்றியும் கொலை செய்துவிட்டு, உடலை போர்வையால் சுற்றி வைத்துவிட்டு பீகாருக்கு தப்பி சென்றது தெரியவந்துள்ளது. விசாரணைக்கு பின் தீரஜ்குமாரை போலீசார் சிறையில் அடைத்துள்ளனர்.

# அமர்நாத் யாத்திரை தற்காலிகமாக நிறுத்தம்



ஸ்ரீநகர், ஆக. 9

ஜம்முகாஷ்மீர் யூனியன் பிரதேசத்தில் இமயமலையில் இந்து மதக்கடவுள் சிவபெருமானின் அமர்நாத் குகைக்கோவில் அமைந்துள்ளது. ஸ்ரீநகரில் இருந்து 141 கிலோ மீட்டர் தொலைவில் அனந்தநாக் மாவட்டத்தின் பஹல்காமில் இந்த கோவில் அமைந்துள்ளது. கடல் மட்டத்தில் இருந்து 3 ஆயிரத்து 888 மீட்டர் உயரத்தில் அமர்நாத் குகைக்கோவில் அமைந்துள்ளது. இந்த குகைக்கோவிலில் இயற்கையாக தோன்றும் பனிலிங்கத்தை தரிசிக்க ஆண்டுதோறும் குறிப்பிட்ட நாட்களுக்கு மட்டும் பக்தர்களுக்கு அனுமதி வழங்கப்படுகிறது. அந்த வகையில் நடப்பு ஆண்டுக்கான அமர்நாத் யாத்திரை கடந்த மாதம் 3ம் தேதி தொடங்கியது. வருகிற 28ம் தேதி வரை 57 நாட்கள் யாத்திரை நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி, கடந்த 3ம் தேதி தொடங்கிய யாத்திரையில் இதுவரை 4.5 லட்சத்திற்கும் மேற்பட்ட பக்தர்கள் அமர்நாத் குகைக்கோவிலில் பனிலிங்கத்தை தரிசனம் செய்துள்ளனர். இந்நிலையில் அமர்நாத் யாத்திரை தற்காலிகமாக ரத்து செய்யப்பட்டுள்ளது. காஷ்மீர் பள்ளத்தாக்கு மற்றும் ரம்பன் மாவட்டப் பகுதிகளில் நிலவும் மோசமான வானிலை, மற்றும் நிலச்சரிவு அபாயம் காரணமாக, பக்தர்களின் பாதுகாப்பைக் கருதி இந்த முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மறு உத்தரவு வரும் வரை அமர்நாத் யாத்திரை தற்காலிகமாக ரத்து செய்யப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

# இன்றைய ராசி பலன்கள் (09.08.2026)

**மேஷம்**: குடும்பத்தில் இருந்த மனக்கசப்புகள் விலகி அமைதி உண்டாகும். கணவன்மனைவி இடையே புரிதல் அதிகரிக்கும். புதிய சுபகாரிய முயற்சிகளில் சிறு தடைகளுக்குப் பின் கைகூடும்.

**ரிஷபம்**: எடுக்கும் முயற்சிகளில் சிறு தாமதங்கள் ஏற்பட்டாலும் விடாமுயற்சியால் நினைத்த காரியத்தை முடிப்பீர்கள். நிதானமான அணுகுமுறை வெற்றி தரும்.

**மிதுனம்**: பேச்சில் நிதானத்தைக் கடைப்பிடிப்பது நல்லது. பிற விஷயங்களில் தேவையில்லாமல் தலையிடுவதைத் தவிர்ப்பது நன்மை பயக்கும்.

**கடகம்**: குடும்பத்தில் கணவன்மனைவி இடையே ஒற்றுமை கூடும். பணவரவு திருப்திகரமாக இருக்கும்; ஆனால் பிறருக்கு முன்ஜாமீன் தருவதையோ வாக்குறுதி அளிப்பதையோ தவிர்க்கவும்.

**சிம்மம்**: உற்சாகமும் சுறுசுறுப்பும் அதிகரிக்கும் நாள். தடைபட்ட காரியங்கள் சிறப்பாக முடிவடையும். பூர்வீக சொத்து வழியில் அனுகூலமான தகவல்கள் வரும்.

**கன்னி**: புதிய முயற்சிகளைத் தவிர்த்து, அன்றாட வேலைகளில் மட்டும் கவனம் செலுத்துவது நல்லது. தேவையற்ற வாக்குவாதங்களைத் தவிர்க்கவும்.

**துலாம்**: பயணங்களின் போது எச்சரிக்கையுடன் இருக்கவும். பொறுமையாகவும் நிதானமாகவும் செயல்படுவது சாதகமான சூழலை உருவாக்கும்.

**விருச்சிகம்**: உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு மேலதிகாரிகளின் ஆதரவும் பாராட்டும் கிடைக்கும். குடும்பத்தினரின் தேவைகளைப் பூர்த்தி செய்வீர்கள்.

**தனுசு**: பொருளாதார நிலை திருப்திகரமாக இருக்கும். சுபகாரியப் பேச்சுகளை சிறிது காலம் தள்ளி வைப்பது நல்லது. வீண் செலவுகளைக் கட்டுப்படுத்தவும்.

**மகரம்**: கமிஷன் மற்றும் கான்ட்ராக்ட் தொழிலில் உள்ளவர்களுக்கு நல்ல லாபம் கிடைக்கும். பெரிய தொகையை முதலீடு செய்வதை அல்லது கடன் கொடுப்பதைத் தவிர்க்கவும்.

**கும்பம்**: உழைப்பிற்கேற்ற சிறப்பான பலன்கள் கிடைக்கும். தொழிலில் புதிய வாய்ப்புகளும் வெளியூர் ஆர்டர்களும் வந்து சேரும்.

**மீனம்**: தொழில் மற்றும் வியாபாரத்தில் நல்ல முன்னேற்றம் காணப்படும். நிலுவையில் இருந்த வங்கிக் கடன்களை அடைத்து நிம்மதி பெறுவீர்கள்.

# 11 தமிழக மீனவர்கள் இலங்கை சிறையில் அடைப்பு: ராமேஸ்வரத்தில் வேலை நிறுத்தம் அறிவிப்பு

சென்னை, ஆக. 9

தொகுதி மறுவரையறை நடந்தால் தமிழக மக்களவை தொகுதிகள் 39ல் இருந்து 59 ஆக உயர வாய்ப்பு உள்ளது. அவ்வாறு உயர்ந்தால், 59 தொகுதிகளின் உத்தேச பட்டியல் வெளியாகியுள்ளது.

நடைபெற்றுவரும்நாடாளுமன்றம்மழைக்கால கூட்டத் தொடரில், திருத்தப்பட்ட தொகுதி மறுவரையறை சட்ட மசோதா தாக்கல் செய்யப்பட உள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

மக்கள்தொகை அடிப்படையில் நாடாளுமன்ற, சட்டமன்ற தொகுதிகளின் எல்லைகள் வரையறுக்கப்பட இருப்பதால், மக்கள்தொகையை கட்டுப்படுத்திய மாநிலங்கள் இதற்கு கடும் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றன

தொகுதி மறுவரையறை சட்ட மசோதா நாடாளுமன்ற இரு அவைகளிலும் நிறைவேறினால்,நாடுமுழுவதும்தற்போதுள்ள 543 தொகுதிகள் 850 ஆக உயரும். குறிப்பாக, தமிழ்நாட்டில் உள்ள 39 தொகுதிகள், 59 ஆக உயர வாய்ப்பு உள்ளது.

ஆனால், மக்கள்தொகையை கட்டுப்படுத்தாத மாநிலங்களுக்கு இதைவிட அதிக தொகுதிகள் கிடைக்கும் என்பதால், தமிழகம் உள்ளிட்ட பல மாநிலங்கள் இதற்கு எதிர்ப்பு தெரிவித்து வருகின்றன.

இந்த நிலையில், தொகுதி மறுவரையறை குறித்து விவாதிக்க தமிழக எம்.பி.க்கள் ஆலோசனை கூட்டத்தை முதல்அமைச்சர் ஜோசப் விஜய் இன்று மாலை 3 மணிக்கு சென்னை கலைவாணர் அரங்கத்தில் கூட்டியுள்ளார். ஆனால், இந்த கூட்டத்தை தி.மு.க., அ.தி.மு.க. உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் புறக்கணிக்க இருப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. என்றாலும், நாடாளுமன்ற இரு அவைகளில் தொகுதி மறுவரையறை சட்ட மசோதா நிறைவேறினால், தமிழ்நாட்டில் உள்ள நாடாளுமன்ற தொகுதிகள் 59 ஆக உயரும். அவ்வாறு உயர்ந்தால், என்னென்ன பெயர்களில் மக்களவை தொகுதிகள் இருக்கும் என்ற உத்தேச பட்டியல் வெளியாகியுள்ளது.

அதன் விவரம் வருமாறு:

1) திருத்தணி 2) திருவள்ளூர் 3) சென்னை வடக்கு 4) சென்னை கிழக்கு 5) சென்னை மத்திய 6) சென்னை தெற்கு 7) சென்னை மேற்கு 8) தாம்பரம் 9) செங்கல்பட்டு 10) காஞ்சிபுரம் 11)வேலூர் 12)திருப்பத்தூர் 13)ராணிப்பேட்டை 14) திருவண்ணாமலை 15) வந்தவாசி / ஆரணி 16) திண்டிவனம் 17) விழுப்புரம் 18) கள்ளக்குறிச்சி 19) கடலூர் 20) சிதம்பரம் 21) ஓசூர் 22) கிருஷ்ணகிரி 23) தர்மபுரி 24) சேலம் 25) மேட்டூர் 26) ராசிபுரம் 27) நாமக்கல் 28) ஈரோடு 29) கோபிசெட்டிபாளையம் 30) திருப்பூர் 31) தாராபுரம் (அல்லது) பழனி 32) பொள்ளாச்சி 33) கோவை கிழக்கு 34) கோவை மேற்கு 35) நீலகிரி 36) கரூர் 37) பெரம்பலூர் 38) அரியலூர் (அல்லது) லால்குடி 39) திருச்சிராப்பள்ளி 40) தஞ்சாவூர் 41) கும்பகோணம் 42) மயிலாடுதுறை 43) நாகபட்டினம் 44)திருவாரூர் 45)புதுக்கோட்டை 46) சிவகங்கை 47) ராமநாதபுரம் 48) தூத்துக்குடி 49) திருச்செந்தூர் 50) திருநெல்வேலி 51) நாங்குநேரி (அல்லது) கன்னியாகுமரி 52) கன்னியாகுமரி (அல்லது) நாகர்கோவில் 53) தென்காசி 54) சிவகாசி 55) விருதுநகர் 56) தேனி 57) மதுரை கிழக்கு 58) மதுரை மேற்கு 59) திண்டுக்கல்

# 12 அணிகள் பங்கேற்கும் தமிழ் ஆக்கி லீக் போட்டி




சூப்பர் சிக்ஸ் சுற்று முடிவில் முதல் 4 இடங்களை பிடிக்கும் அணிகள் இறுதிப்போட்டிக்கு முந்தைய 'பிளேஆப்' சுற்றுக்கு முன்னேறும்.

ஆக்கி திருவள்ளூர் சார்பில் தமிழ் ஆக்கி லீக் போட்டி சென்னை எழும்பூரில் உள்ள மேயர் ராதாகிருஷ்ணன் ஸ்டேடியத்தில் நாளை (ஞாயிற்றுக்கிழமை) முதல் செப்டம்பர் 12ந் தேதி வரை நடக்கிறது. ரேலா ஆஸ்பத்திரி ஆதரவுடன் நடைபெறும் இந்த போட்டியில் பங்கேற்கும் 12 அணிகள் இரு பிரிவாக பிரிக்கப்பட்டுள்ளன.


இதன்படி 'ஏ' பிரிவில் இந்தியன் வங்கி, வருமான வரி, தெற்கு ரெயில்வே. எஸ்.எம்.நகர், ஜி.எஸ்.டி. மற்றும் கலால் வரி, எஸ்.டி.ஏ.டி. விளையாட்டு விடுதி அணியும், 'பி' பிரிவில் இந்தியன் ஓவர்சீஸ் வங்கி, ஏ.ஜி.அலுவலகம், தயாந்த் வீரன்ஸ், பட்டாபிராம் ஸ்டிரைக்கர்ஸ், இந்திய உணவு கழகம், ஐ.சி.எப். அணியும் இடம் பெற்றுள்ளன.

லீக் சுற்று முடிவில் ஒவ்வொரு பிரிவிலும் 'டாப்3' இடங்களை பிடிக்கும் அணிகள் 'சூப்பர் சிக்ஸ்' சுற்றுக்குள் நுழையும். சூப்பர் சிக்ஸ் சுற்று முடிவில் முதல் 4 இடங்களை பிடிக்கும் அணிகள் இறுதிப்போட்டிக்கு முந்தைய 'பிளேஆப்' சுற்றுக்கு முன்னேறும். இந்த போட்டியில் சாம்பியன் பட்டம் வெல்லும் அணிக்கு ரூ. 1 லட்சமும், 2வது இடம் பெறும் அணிக்கு ரூ.50 ஆயிரமும் பரிசாக வழங்கப்படும்.

தொடக்க நாளில் நடைபெறும் ஆட்டத்தில் ஜி.எஸ்.டி. எஸ்.டி.ஏ.டி அணிகள் (பிற்பகல் 2.30 மணி) மோதுகின்றன.

இது தவிர பெண்களுக்கு மினி லீக் ஆக்கி போட்டி நடத்தப்படுகிறது. இதில் 4 அணிகள் கலந்து கொள்கின்றன. இந்த தகவலை போட்டி அமைப்பு குழு தலைவர் டாக்டர் பிரகாஷ் அய்யாதுரை சென்னையில் நேற்று நிருபர்களிடம் தெரிவித்தார். அப்போது போட்டி இயக்குனரும், இந்திய ஆக்கி அணியின் முன்னாள் கேப்டனுமான வி.பாஸ்கரன், டெக்னிக்கல் அதிகாரி முனீர் சேட், இந்திய அணி யின் முன்னாள் வீரர் திருமால்வளவன், சென்னை ஆக்கி சங்க செயலாளர் உதயகுமார் உள்ளிட்டோர் உடனிருந்தனர். இந்த நிகழ்ச்சியில், போட்டியில் வெற்றி பெறும் அணிக்கு வழங்கப்படும் பரிசுக் கோப்பை அறிமுகம் செய்யப்பட்டது.

# 2வது ஒருநாள் போட்டி: அயர்லாந்தை வீழ்த்தி ஆப்கானிஸ்தான் அபார வெற்றி



ஆப்கானிஸ்தான் கிரிக்கெட் அணி அயர்லாந்து சுற்றுப்பயணம் மேற்கொண்டு 5 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் விளையாடி வருகிறது.

அதன்படி இரு அணிகளுக்கும் இடையேயான முதல் ஒருநாள் போட்டி மழை காரணமாக ரத்து செய்யப்பட்டது.

இந்நிலையில், அயர்லாந்து, ஆப்கானிஸ்தான் இடையேயான 2வது ஒருநாள் போட்டி நேற்று நடைபெற்றது.

அயர்லாந்தின் பிரிடி நகரில் உள்ள மைதானத்தில் நடைபெற இப்போட்டியில் டாஸ் வென்ற அயர்லாந்து முதலில் பந்து வீச்சை தேர்வு செய்தது. அதேவேளை, இப்போட்டியில் மழை குறுக்கிட்டதால் ஆட்டம் 47 ஓவர்களாக குறைக்கப்பட்டது.

இதையடுத்து, களமிறங்கிய ஆப்கானிஸ்தான் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தியது. இறுதியில் ஆப்கானிஸ்தான் 47 ஓவர்கள் முடிவில் 8 விக்கெட்டுகள் இழப்பிற்கு 299 ரன்கள் குவித்துள்ளது.

சிறப்பாக ஆடிய அந்த அணியின் தொடக்க வீரர் இப்ராகிம் அதிகபட்சமாக 84 ரன்கள் குவித்தார். அயர்லாந்து தரப்பில் அந்த அணியின் மார்க் அதிர், ஜெய் முந்திரா அதிகபட்சமாக தலா 2 விக்கெட்டுகளை வீழ்த்தினர்.

இதையடுத்து 300 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற கடினமான இலக்குடன் களமிறங்கிய அயர்லாந்து 33.4 ஓவரில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 207 ரன்கள் மட்டும் எடுத்தது. இதன்மூலம் அயர்லாந்தை 92 ரன்கள் வித்தியாசத்தில் வீழ்த்தி ஆப்கானிஸ்தான் அபார வெற்றிபெற்றது.

சிறப்பாக பந்துவீசிய ஆப்கானிஸ்தான் வீரர் ரஷித்கான் அதிகபட்சமாக 6 விக்கெட்டுகளை வீழ்த்தினார். இரு அணிகளுக்கும் இடையேயான 3வது ஒருநாள் போட்டி நாளை மறுதினம் நடைபெற உள்ளது.

# டிஎன்பிஎல்: கோவைக்கு எதிராக மதுரை பந்து வீச்சு தேர்வு

10வது டிஎன்பிஎல் டி20 கிரிக்கெட் தொடர் திண்டுக்கல் மாவட்டம் நத்தம் எம்.பி.ஆர். கல்லூரி மைதானத்தில் நடைபெற்று வருகிறது.

இத்தொடரில் இன்று நடைபெற்று வரும் 7வது லீக் ஆட்டத்தில் மதுரை பாந்தர்ஸ், கோவை கிங்ஸ் அணிகள் மோத உள்ளன.

இப்போட்டிக்கான டாஸ் சுண்டப்பட்டது. இதில் டாஸ் வென்ற மதுரை பாந்தர்ஸ் முதலில் பந்து வீச்சை தேர்வு செய்தது. இதையடுத்து, கோவை கிங்ஸ் முதலில் களமிறங்கி பேட்டிங் செய்ய உள்ளது. ஆட்டம் 3.30 மணிக்கு தொடங்க உள்ளது.

# படப்பிடிப்பே இன்னும் தொடங்கல... அதுக்குள்ள இத்தனை கோடி வியாபாரமா?



இயக்குநர் ஆதிக் ரவிச்சந்திரன் இயக்கத்தில் அஜித்குமார் நடிக்க உள்ள 'டேர் டெவில்' படத்தின் திரையரங்க உரிமை, ஓ.டி.டி. உரிமை மற்றும் சாட்டிலைட் உரிமை என ஒட்டுமொத்தமாக ரூ.180 கோடி வரை படத்தின் வியாபாரம் முடிந்திருப்பதாக கூறப்படுகிறது.

தமிழ் சினிமாவின் முன்னணி நடிகரான அஜித்குமார், கார் பந்தயத்திலும் அசத்தி விருதுகள் மேல் விருதுகளை குவித்து வருகிறார். கடந்த ஆண்டு அஜித்குமார் நடிப்பில் 'குட் பேட் அக்லி' திரைப்படம் வெளியாகி 'ஹிட்' அடித்திருந்தது. இந்தப் படத்தை ஆதிக் ரவிச்சந்திரன் இயக்கி இருந்தார். இந்தப் படத்துக்கு பிறகு அஜித்குமார் கார் பந்தயங்களில் பிசியானார். இதற்கிடையில் மீண்டும் ஆதிக் ரவிச்சந்திரன் இயக்கத்தில் அஜித்குமார் புதிய படத்தில் நடிக்க ஒப்பந்தமாகி இருக்கிறார். அஜித்தின் 64வது திரைப்படமாக உருவாக உள்ள இந்தப் படத்திற்கு 'டேர்டெவில்' என்று பெயரிடப்பட்டுள்ளது. பிரேவ் ஹார்ட்ஸ் புரடக்ஷன்ஸ் என்கிற பெயரில் ஷாலினி அஜித்குமார் தயாரிக்கும் இப்படத்திற்கு அனிருத் இசையமைக்கிறார். சமீபத்தில் வெளியான இந்த அறிவிப்பு ரசிகர்களிடையே பெரும் வரவேற்பை பெற்றது. விரைவில் படப்பிடிப்பு தொடங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்த நிலையில் இந்த புதிய படத்தின் 'அப்டேட்' ஒன்று வெளியாகி இருக்கிறது. அதாவது படத்தின் தமிழ்நாட்டு திரையரங்க உரிமை, ஓ.டி.டி. உரிமை மற்றும் சாட்டிலைட் உரிமை என ஒட்டுமொத்தமாக ரூ.180 கோடி வரை படத்தின் வியாபாரம் முடிந்திருப்பதாக கூறப்படுகிறது. படப்பிடிப்பு தொடங்குவதற்கு முன்பாகவே படத்தின் முதல்கட்ட வியாபாரம் முடிந்திருப்பது சினிமா வட்டாரத்தில் பரபரப்பாக பேசப்படுகிறது.

# ரசிகர்கள் எதிர்பார்த்து காத்திருந்த "டாக்ஸிக்" படத்தின் டிரெய்லர் அப்டேட்



'டாக்ஸிக்' திரைப்படத்தின் டிரெய்லர் இன்று மாலை 07.01 மணிக்கு வெளியாகும் என்று படக்குழுவினர் அதிகாரப்பூர்வமாக அறிவித்துள்ளனர். இந்தமிரட்டலானடிரெய்லரைகாணரசிகர்கள்ஆவலுடன்காத்திருக்கின்றனர். 'கே.ஜி.எப்' படங்களின் வெற்றிக்குப் பிறகு நடிகர் யாஷ் நடித்துள்ள 'டாக்ஸிக்' திரைப்படத்தை இயக்குநர் கீது மோகன்தாஸ் இயக்கியுள்ளார். கேவிஎன் புரொடக்ஷன்ஸ் தயாரித்துள்ள இந்த கேங்ஸ்டர் டிராமா படத்தில் நயன்தாரா, கியாரா அத்வானி, ருக்மணி வசந்த், ஹூமா குரேஷி, தாரா சுதாரியா உள்ளிட்டோர் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்துள்ளனர். அண்மையில் வெளியான 'லேடீஸ் அண்ட் லேடீஸ்' அறிமுக வீடியோ ரசிகர்களிடையே நல்ல வரவேற்பைப் பெற்றது.

1940 முதல் 1970ம் ஆண்டு வரையிலான காலகட்டத்தில் கோவாவில் நடைபெற்ற போதைப்பொருள் கடத்தல் மற்றும் மாபியா கும்பல்களின் பின்னணியை மையமாகக் கொண்டு இந்த ஆக்ஷன் திரில்லர் திரைப்படம் உருவாகியுள்ளது.

சமீபத்தில் வெளியான 'டாக்ஸிக்' டீசர் சமூக வலைதளங்களில் வைரலானது. அதே நேரத்தில், அதில் இடம்பெற்ற சில காட்சிகள் குறித்து சமூக வலைதளங்களில் விமர்சனங்களும் எழுந்தன. குறிப்பாக, சில காட்சிகள் சர்ச்சையை ஏற்படுத்தியதால் டீசர் பரபரப்பாக பேசப்பட்டது. இருந்தபோதிலும் அதிக பார்வையார்களை பெற்றது.

இந்த படம் வரும் ஆகஸ்ட் 26ம் தேதி உலகம் முழுவதும் திரையரங்குகளில் வெளியாக உள்ளது. இந்த நிலையில், 'டாக்ஸிக்' திரைப்படத்தின் டிரெய்லர் இன்று மாலை 07.01 மணியளவில் வெளியாகும் என படக்குழு அதிகாரப்பூர்வமாக அறிவித்துள்ளது. இதையடுத்து, யாஷின் மிரட்டலான டிரெய்லரை காண ரசிகர்கள் ஆவலுடன் காத்திருக்கின்றனர்.

# சர்வதேச திரைப்பட விழாவில் திரையிடப்படும் அமலா பாலின் 'ஹாஃப்'

அமலா பால் நடித்துள்ள 'ஹாஃப்' திரைப்படம் சர்வதேச அளவில் புதிய கவனத்தை பெற்றுள்ளது. செப்டம்பர் மாதம் நடைபெற உள்ள டொராண்டோ சர்வதேச திரைப்பட விழாவில் (TIFF) இப்படம் திரையிட தேர்வாகியுள்ளது. தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம் என தென்னிந்திய மொழிகளில் பல்வேறு வெற்றிப் படங்களில் நடித்து ரசிகர்களை கவர்ந்தவர் நடிகை அமலா பால். வித்தியாசமான கதைக்களம் கொண்ட படங்களை தேர்வு செய்து நடித்து வரும் இவர், தனது தனித்துவமான நடிப்பால் திரையுலகில் தனக்கென ஒரு இடத்தை உருவாக்கியுள்ளார். திருமணத்துக்கு பிறகு திரைப்படங்களில் நடிப்பதில் இருந்து சற்று விலகியிருந்த அமலா பால், தற்போது அடுத்தடுத்த படங்களில் கவனம் செலுத்தி வருகிறார். அந்த வகையில், இயக்குநர் சம்ஜத் இயக்கியுள்ள 'ஹாஃப்' திரைப்படத்தில் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்துள்ளார். ரஞ்சித் சஜீவ், ஐஸ்வர்யா ராஜ், அப்பாஸ் மற்றும் அமலா பால் உள்ளிட்டோர் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்துள்ள இப்படம், வாம்பயர் ஆக்ஷன் திரில்லர் கதைக்களத்தில் உருவாகியுள்ளது. மலையாளத்தில் உருவாகியுள்ள இப்படம் தமிழ், தெலுங்கு, இந்தி, கன்னடம் மற்றும் அரபு மொழிகளிலும் வெளியாக உள்ளது. இந்த நிலையில், அமலா பால் நடித்துள்ள 'ஹாஃப்' திரைப்படம் சர்வதேச அளவில் புதிய கவனத்தை பெற்றுள்ளது. செப்டம்பர் மாதம் நடைபெற உள்ள டொராண்டோ சர்வதேச திரைப்பட விழாவில் (TIFF) இப்படம் திரையிட தேர்வாகியுள்ளது.

குறிப்பாக, TIFFன் பிரபலமான 'Midnight Madness' பிரிவில் 'ஹாஃப்' இடம்பெற்றுள்ளது. திகில், ஆக்ஷன் மற்றும் வித்தியாசமான கதைக்களம் கொண்ட திரைப்படங்களுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படும் இந்தப் பிரிவில் இப்படம் தேர்வாகியிருப்பது, படக்குழுவினருக்கு மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

மலையாள சினிமா தொடர்ந்து வித்தியாசமான கதைக்களங்களுடன் சர்வதேச அளவில் கவனம் ஈர்த்து வரும் நிலையில், 'ஹாஃப்' திரைப்படமும் சர்வதேச திரைப்பட விழாவில் திரையிட தேர்வாகியிருப்பது குறிப்பிடத்தக்க சாதனையாக பார்க்கப்படுகிறது.

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.